1015

"பக்திவலையிற் படுவோன் காண்க" — 2.

ஸ்ரீ

அத்திகிரி

(என்னும்)

ஸ்ரீ காஞ்சி க்ஷேத்ர மஹாத்மியம்

ஆசிரியர் :
S. V. வரதராஜய்யங்கார்
உறையூர்.

ஸ்ரீமான் சின்னசாமய்யா அவர்களால்
வெளியிடப்பெற்றது.

சென்னை :
சந்திரா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1925

(Registered Copy Right)

[தபால் சார்ஜ் ப்ரத்யேகம்.

Q2:38.2112K
N25
85311

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய க்ரந்தங்கள்.

	ரூ.	அ.	ப.
நாலாயிர திவ்ய ப்ரபந்தம்	3	8	0
முதலாயிரம் தனி அகராதியுள்பட	1	0	0
பெரியதிருமொழி தனி ஷை	1	0	0
இயற்பா தனி ஷை	1	0	0
திருவாய்மொழி தனி ஷை	1	0	0
நித்யாநுஸந்தானம் மார்பில் பைண்டு	0	10	0
ஷை ப்ரதிபத தாத்பர்யம்	1	8	0
அஷ்டப்ரபந்தம் உரையுடன் காலிகோ பைண்டு	3	8	0
அஷ்டாதச ரஹஸ்யங்கள் டிப்பணியுடன்	2	0	0
விஷ்ணுஸ்தலமஞ்சரி	0	12	0
முமுக்ஷுப்படி வ்யாக்யானம்	1	8	0
ஸ்ரீவசனபூஷணம் வ்யாக்யானம்	2	4	0
குருபரம்பரை ஆறாயிரப்படி	2	8	0
குருபரம்பரை மூவாயிரப்படி	0	12	0
விலக்ஷண மோக்ஷாதிகாரி நிர்ணயம்	0	12	0
திருவாராதனக்ரமம்	0	6	0
திருப்பல்லாண்டு வ்யாக்யானம்	0	12	0
பெரிய திருமொழி வ்யாக்யானம் 1 முதல் 3 பத்துகள்	2	12	0
,, 4 ,, 7	3	0	0
,, 8 ,, 11 ,,	2	14	0
ஸ்ரீவைஷ்ணவ ஸமயாசார நிஷ்கர்ஷம்	2	8	0
பெரியாழ்வார் திருமொழி வ்யாக்யானம்			
,, 1 முதல் 2 பத்துகள்	2	4	0
,, 3 4 5 ,,	3	8	0
உபதேசரத்னமாலை வ்யாக்யானம்	1	4	0
திருச்சந்தவிருத்தம் வ்யாக்யானம்	1	12	0
திருப்பள்ளியெழுச்சி ,,	0	5	0
அமலனாதிபிரான் ,,	0	12	0
திருவாய்மொழி நூற்றந்தாதி ,,	1	4	0
ஞானஸாரம் ,,	0	12	0
ஸப்தகாதை ,,	0	5	0

Q2:38-2
N25
OFFICE OF THE REGISTRAR OF
21 AUG 1925

‘நிசுளாபுரி,’

‘பக்திவலையிற் படுவோன் காண்க’! இப்பெயர் புனைய உறையூர் ஸ்தல மஹாத்மியத்தை ஆழ்வார் வைபவமுட்பட ஸ்ரீமான், S. V. வரதராஜய்யங்கார் அவர்கள், எளிய தமிழ் நடையிலாராய்ச்சி யுட னெழுதியுள்ளார். இதன் விலை அணா 6. வேண்டுவோர். S. V. வரதராஜய்யங்கார் ‘சரஸ்வதி நிலயம்’ உறையூர் திருச்சி. என்ற விலாசத்திற்காவது அல்லது, S சின்னசாமய்யா, உரிமையாளர், ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்த புத்தகசாலை, 7, ராமாநுஜய்யர் தெரு, சாவ்கார் பேட்டை, சென்னை. என்ற விலாசத்திற்காவது எழுதி வி. பி. மூல்யமாகவும், புக்போஸ்டு வாயிலாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

ஸ்ரீ வில்லிபுத்தூர் 85311

ஆண்டாள்

மஹாத்மியம் வெகு சீக்கிரத்தில் வெளிவரும்.
S. V வரதராஜய்யங்காரால் தயாரிக்கப்பெற்று வருகின்றது.
வெளிவரும் தேதியை எதிர்பாருங்கள்.

திருக்குருகூர் மஹாத்மியம்
நம்மாழ்வார் சரித்திரம்,

இவை

மீ. கோ. இராமாநுஜஸ்வாமி அவர்களில்

எழுதப்பட்டு,

எஸ். ஸி. ஸ்வாமி அண்டு ஸன்ஸ்

அவர்களால்

பிரசுரம் செய்யப்பட்டது.

294525
689

ஆசிரியருரை.

"பக்தி வலையிற் படுவோன் காண்க"

என்ற தலைப்பின்கீழ் "யார்யார் பக்தி வலை தொடுத்துளார், எவ்வா றவர்களின் பிணிப் பிற்கு இறைவன் இரையானான்" என்று கூற அவாக்கொண்டு, எம்முடைய உறை நகராகும் திருவுரந்தையிலேயே யவதரித்து, பொன்னரங்கனின் திருவடித் தாமரைகளைக் காதல் கொண்டடைந்த ஸ்ரீ கமலவல்லியார் வைபவத்தையும், மற்று மவ்வுறையூரிலேயே யவதாரங்கொண்டு, பாணர் குலத்தில் வளர்ந்து, "அமலனாதி பிரானை" யருளிச்செய்து, அணியரங்கனி னடிச்சுவடுகளை யடைந்த திருப்பாணாழ்வார் திருச்சரிதத்தையும் நிசுளாபுரி' யென்ற பெயருடன், உறையூரின் மஹாத்மியமாக எம் சிற்றறிவிற் கெட்டிய அளவில் எளிய நடையி லாராய்ச்சியுட னெழுதியுள்ளோம்.

இனி, அடைந்தவருக்கு முமுக்ஷுவத்தைப் பிரசாதித் தருளும் சப்தக்ஷேத்திரங்களி லொன்றாகி. 'அத்திகிரி' யென்று வழங்கப்பெறும் ஸ்ரீ காஞ்சீபுர மஹாத்மியத்தை 'பக்தி வலையிற் படுவோன் காண்க' வென்னும் மலரினி ரண்டாமிதழாகக் கொண் டெழுதி யுள்ளோம். வடமொழி நூலாதாரத்தைக் கொண்டும் மற்றுஞ் சிற்சில நூல்களையும், நாலாயிர திவ்ய பிரபந்தத்தையுங் கண்டு யின்நூ லெழுதப் பெற்றுளது.

இந்திரன் சரஸ்வதி தேவியிடமாகப்பெற்ற சாபம் ஸ்ரீகாஞ்சியில் விமோசன மானதையும், 'ஹேமன், சுக்லன்' என்னு மிரு வேதியச் சிறுவர்கள் பல்லிகளாகச் சபிக்கப்பட்டு சாபம், நீங்கியதும், சகலலோக சிருஷ்டி நாயகனும் பிரம்மன் சிருஷ்டி தண்டத்

தை யிழந்து, அஸ்வமேத யாகத்தைச் செய்து மீண்டும் ஆக்ருந்திரன் பிருந்த கோலப் பெற்று விளங்கிய வரலாற்றையும், மேற்கூறிய வேள்வியை நான்முக னியற்றுங்கால், சரஸ்வதிதேவி குரோதங்கொண்டு செய்த விடையூறுகளையும், அவ்விடை யூற்றுக்கிடையூராக, ஸ்ரீமஹாவிஷ்ணு நின்று நிலவின சிறப்பையும், மேலுமிக் காஞ்சியின் சிறப்பை நன்கு விளக்க, சந்தர்ப்பத்திற்கேற்றவாறு இரண்டொரு கதைகளையும், ஆங்கேயவதரித்து சித்தியடைய பக்திவலை வீசிய, மெய்யடியாராகும் பொய்கையாரின் திருச்சரிதத்தையும் அருங்க விளக்கி யுள்ளோம். அவ்வவ்விடங்களிற் பொருந்துமாறு கம்பர், ஔவை, தாயுமானவர், ஆழ்வார்கள் முதலானோரின் பாடல்களிற் சிலவற்றை யெடுத்துக் காட்டியுள்ளோம். 'ஸ்தல புராணங்களைக்கேட்பது புண்யப்பிரதமான தென்பது பெரியார் கொள்கையானது பற்றி, யிந்நூலை பெழுதலாகுந் தொண்டின் புண்யத்தி னொரு பகுதிக் கிச்சை கொண்டே யிந்நூலை விளம்பலானோம். 'குற்றங்களைந்து குறைபெய்தி வாசித்தல் கற்றறிந்தர் மாந்தர்கட" னென்பது போன்று இந் நூலிற் சிறிது குற்றங்களிருப்பினு மன்னப்பேடையையொத் திருப்பார் பெரியா ரென்பது நம் துணிபு. இந்நூலை வெளியிடும் பாக்யம் பெற்ற ஸ்ரீமான் சின்னசாமய்ய அவர்களுக்கு, ஆஸ்திக சிகாமணிகளாகும் சகலரும், நாமும் வந்தனம் வழங்கக் கடமை பூண்டுள்ளோம்.

சரஸ்வதி நிலயம்: }
உறையூர். } ஸ்ரீ. வே வரதராஜய்யங்கார்.

கடவுள் வாழ்த்து.

1. எம்மாண்பிலயன் நான்கு நாவினாலும்
எடுத்தேத்தி ஈரிரண்டு முகமுங் கொண்டு
எம்மாடு மெழிற் கண்களெட்டி னோடும்
தொழுதேத்தி யினிதிறைஞ்ச நின்ற செம்பொன்
அம்மான்றன் மலர்க்கயல கொப்பூழ் தோன்ற
அணியரங்கத் தரவணையில் பள்ளிகொள்ளும்
அம்மான்றனடியிணைக் கீழலர்க ளிட்டங்
கடியவ ரோடென்று கொலோவணுகு நாளே.

குலசேகராழ்வார்.

2. கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெ
யுண்டவாயனை என்னுள்ளம் கவர்ந்தானை
அண்டர்கோ னணியரங்கன் என்னமுதினைக்
கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே.

திருப்பாணாழ்வார்.

3. வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந் துயரிடும்பை யிற் பிறந்து
கூடினேன் கூடி யிளையவர் தம்மோ
டவர்தரும் கலவியேகருதி
ஓடினே னோடி யுய்வதோர் பொருளா
லுணர் வெனும் பெரும் பதந் தெரிந்து
நாடினேன் நாடி நான் கண்டுகொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்.

4. ஆவியே யமுதே யென நினைந்துருகி
யவரவர் பணைமுலை துணையா
பாவியே னுணரா தெத்தனை பகலும்
பழுதுபோ யொழிந்தன நாள்கள்
தூவி சேரன்னம துணையொடும் புணரும்
சூழ்புனல் குடந்தையே தொழுதென்
நாவினாலுய்ய நான் கண்டுகொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்.

திருமங்கை மன்னன்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

அத்திகிரி மஹாத்தியம்.

ஸ்லோ. அயோத்யா மதுரா மாயா காசி காஞ்சி
அவந்திகா, புரீ த்வார புரீசைவா சப்தயதே மோக்ஷ
தாயகா.

நிலமகளுக்கு திலகம்போன் றிலங்கு மிப் புண்ய பாரத பூமியில் பூர்வகாலத்தில், பற்பல இராஜ்யங்கள் சீருஞ் சிறப்புமொருங்கேயுற்று விளங்கி நின்றன. அவைகளுள் என்று மழியாப் புகழை யெய்திய நாடு தொண்டைநாடே. இந்து சமயமென்னு மொரு பெரு விருக்ஷத்தின் சைவம், வைஷ்ணவமென்றமிரு பெருங்கிளைகளுள் அவ்வச் சமயம் "மழுங்குபு மண்ணுறுமணி" போன்று சீர் கேடடைந்த காலத்து புத்துயிரளித்து புகழுற்ற சமயக் குரவர்கள் பலர் தோன்றிய நாடு இதேயன்றி வேறுண்டோ! வைஷ்ணவ மென்னும் பயிர் குளிர்ந்து தளிர்விட்டு தழைத்து பயன் றந்த பண்ணை யிதேயல்லவா? மெய்யடியார்களில் செய்தற்கரிய தவஞ் செய்து எய்தும் பயனைப் பொய்கையாரே எய்தினர். இப் பொய்கையார் உய்த்த நாடு மித் தொண்டை நாடே இந் நாட்டின் சிறப்பைக் கூற கூறக் குழுமி வழிகின்றது.

மேற்கு பவளமலை வேங்கட நேர்வடக்கா
மார்க்கு முவரி பணிகிழக்கு - பார்க்குளுயர்
தெற்குப் பிணுகி திசழிரு பதின் காதம்
நன் றெண்டை நாடெனவே நாட்டு"

என்றார் தொண்டைக் குண்டான எல்லையைப் புகழ்ந்து புகல வந்த கவியும். இந்நாடு இருபத்திரண்டு வைணவத் திருப்பதிகளை யுடையது. இயற்கைக் கவிகளான பலருந் தோன்றிய நாடுமிதுவே. "தெண்ணீர் வயல் தொண்டை நன்னாடு சான்றோருடைத்து" என்று, நம் தொண்டை நாட்டை எத்திக்கூற வந்த ஔவையும் புகன்றனள். பேயாழ்வார், பூதத்தாழ்வார் முதலான சிறந்த வைணவ பக்தர்கள் தோன்றிய நாடு மித்தொண்டை நன்றே. இத்தொண்டை நாடு தானியங்கள் மிகுந்து விளைந்து பயனளித்த பண்ணை. இத்தொண்டை மண்டலத்திற்கு நடுநாயகம்போலும், உலகிற்குச் சூரியன் போன்றும், இராஜதானியாய் விளங்கியது காஞ்சீபுர மென்னும் பட்டிணமே. பல பராக்கிரம பிரபல அரசர்களு மிக் காஞ்சியைத் தம் தலை நகராகக்கொண்டனர். பற்பல முக்கியப்போர்களு மிக் காஞ்சியில் நிகழ்ந்தன; இப் புரியில் சதா ஜெயபேரி யொலித்துக் கொண்டிருந்த தெனலாம். பல சோழராஜாக்கள் இந் நகரிலேயே தம் வெற்றிக் கொடியை நிலை நாட்டினர். உயர்ந்த மதிலை யெழுப்பி, க்ஷீராப்தி போன்ற கழியை ஆழமாக வெட்டி, அழகு மிகும் கோபுரங்களைக் கட்டி, யிக் காஞ்சியி லரசுபுரிந்த மன்னர்கள் கணக்கிலர். சரித்திர வாயிலாக நோக்கின் சோழர் சிறப்பெல்லாம் காஞ்சிக்குறிய தென நன்கு புலப்படும். புராண சம்பந்தமாக காஞ்சீபுரத்தைக்கூற அவாக் கொண்டோமாதலின் சரித்திர பூர்வமாக அதிக மெழுதுவது மிகையென நினைக்கின்றோம்.

வேகவதி நதி தன் புனலை யீந்து செழுமையுறும் தான்யங்களை யுற்பத்தி செய்து, இக்காஞ்சி நகரைத் தழுவிச் செல்லுகின்றது. கத்தரி, கொத்தவரை, சிறு வெண்டை முதலான காய்கறி வகைகளும், சிறுசம்பா, பெருசம்பா, மணிச்சம்பா, கேழ் வரகு,

கம்பு, சோளம், தினை முதலான நஞ்சை தான்யங்களு மிந் நதித் தாயின் சற்புத்திரர்களாகும்.

காஞ்சீபுரத்தின் சிறப்பைக்கூற அவாக்கொண் டெழுந்த ஔவை பிராட்டியார்,

வையக மெல்லாம் கழனியா, வையகத்துச்
செய்யகமே நாறிறிசையிற் றேயங்கள் செய்யகத்து
வான்கரும்பே தொண்டை வளநாடு, வான்கரும்பின்
சாறே அந் நாட்டுத் தலையூர்கள் சாறட்ட
கட்டியே கச்சிப் புறமெல்லாம் கட்டியுள்
தானேற்ற மாய சருக்கரை மாமணியே
ஆனேற்றான் கச்சியகம்.

என்று மிகவும் இன்பமுறத் தெளிவாகக் கூறி யிருக்கின்றனர். அனந்த கல்யாண குணனான ஸ்ரீயப்பதிக்கு சாத்துவீக்க, மல்லிகை, முல்லை, செண்பகம், இருவாக்ஷி, கதிர்பச்சை, ரோஜா, நீலோற்பலம், செங்கழுநீராகும் நானுவித புஷ்பங்கள் செறிந்து வளர்ந்து, ஈஸ்வரனைத் ததேகத்தியான பூர்வமாய், மானசாபூஜை மூல்யமாய் ஸ்மரிக்கின்றவரின் பக்தி யெவ்வாறு மலர்ந்து அதிகரிக்குமோ, அதே போன்று மலர்ந்து மென்மேலும் அதிக புஷ்பங்களைத் தருவன வாயின. இக்காஞ்சி க்ஷேத்திரத்தில் வரப்பிரசாதியாய் ஸ்ரீவரதராஜ பெருமா ளெழுந்தருளி பக்தர்களுக்கு முக்தியைத் தந்தருளிய மஹாத்மியத்தை யெழுதுவதே இப்புத்தகத்தின் முக்கிய மேற்கோளாம்.

பூலோகத்தில், பாபிகளின் அதிகரிப்பால், பாபச்செயல்கள் மிகுந்து, புண்ணியசீலர்களின் குறைவால், புண்யார்த்தமான சம்பவங்கள் குன்றி, அதர்மமென்னுங் களையானது தர்மமென்னும் பயிரை வளரவிடாது தடுக்குங்காலத்தில், அக்களைபைக் கொய்ய

வேண்டியும், புண்யமென்னும் பயிர் தழைத்தோங்கும் பொருட் டும், சர்வேஸ்வரன் அவதாரஞ் செய்கின்றார். இதை விளக்கவே ஸ்ரீ கண்ணபிரான் கீதையில்,

பரித்ராணாய சாதூனாம் விநாசாயச துஷ்கிருதாம்
தர்மஸம்ஸ்தாபனார்த்தாய சம்பவாமி யுகேயுகே :

என்றார்.

நிற்க, மமதை யென்பது எத்தவம் புரிந்த முனிபுங்கவனையும் இந்திரன் முதலான தேவர்களையும் அதோகதியை யடையும்படி யான நிலையை எய்தச்செய்யும். 'சுவர்க்கத்திற்கு நான் போனால் போகலாம்" என்ற ஓர் பெரியாரின் வாக்யமுண்டு. நான் என் னு மஹங்காரரூபந் தரித்த ராக்ஷசனை எவனொருவன் ஜெயிக் கின்றானோ அவனே சிரேஷ்டனாவான்; அவனையே ஈஸ்வரன் விரும்புவான் என்பது கருத்து. "யானெனு மோரகந்தை என் னளவுமாறவில்லை" என்று எல்லாவற்றையும் வென்ற தாயுமான சுவாமிகளே மிகவும் வருந்திக் கூறியிருக்கின்றார்கள். எத்தவம் புரிந்திடினும், பிராணாயாம பிரத்தியாகார. தான, தாரண, முத லான அஷ்டாங்க யோகங்களைச் செய்து ஜிதேந்திரியனாய் விளங்கிடினும், அஸ்வமேத முதலான யாகங்களைச் செய்யுந் திறமுள்ளவனாயினும், அஹங்கார முடையவனா யிருப்பின் அவனுடைய பராக்கிரமமும், பக்தியும், சூரியனைக் கண்ட விருள் போலகன்றுவிடும். இதை விளக்கவே தொண்டரடிப் பொடி யார் பயந்து, என்னை "யடியார்க் கெளியராய் செய்தருளாய்" என்று பாடியுள்ளார். ஏனெனில் எளியருக்கு அஹங்காரம் மேற்படாதென்பதே நம்முடைய ஆழ்வாரின் கருத்தாம். பிரம்ம தேவனும், இந்திரனும், விஸ்வாமித்ரனும், புரூரவனும் கர்வங் கொண்டு மடிந்துபோயினர். ஆகவே, யாரெக்காலத்தி லஹங்

காரங் கொண்டனர்; அவரெய்திய நிலையென்ன என்பதை விளக்குவாம்.

மூன்றுலகையும் ரக்ஷிக்கும் தண்ணளியுடைய ஸ்ரீ மஹா விஷ்ணுவி னுந்திக் கொடியில் விளங்கும் தாமரைமலரிலே யுதித்து, மகிதலத்தோரால், மலரோனென்று புகழப்பெற்று, சிருஷ்டிகர்த்தாவாய் விளங்கும், பிரம்மதேவனின் தர்மபத்னி யும், சகலகலைகளுக்கும் நிலயமாயும், மானில மக்கட்குத் தாயா கியும் விளங்கும் ஸ்ரீ சரஸ்வதி தேவியார் தன்னுடைய நிலையை யுணர்ந்து, "மானிடர்களுக்கெல்லாம் ஞானத் தாயாகும் நம்மை விடச் சிறப்புற்றூர்யார்? நாமறிவை யருளிச் செய்யாவிடில், செல்வ மிருந்தென்ன? அறிவுஞ் செல்வமுங் கூடியகாலத்தன்றோ ஒருவன் சிறப்பை யெய்துவன்." என்று தன்னுள்ளே கூறிக் கொண்டு, இம்மட்டோடு நில்லாது, பிரம்ம, விஷ்ணு, ருத்தி ராதி ரூபங்கொண்டு, ஆக்கலளித்த லழித்தலென்னு முத்தொழி லைப் புரிந்து உலகை ரக்ஷித்து நிற்கும், ஸ்ரீமந் நாராயணனின் தேவியாயிலங்கி, தனதான்யமுதலான அஷ்ட ஐஸ்வர்யங்களுக்கு மதிபதியாகும் ஸ்ரீதேவியிட மிதைக் கூறி யுவகை கொள்ள வெண்ணி வைகுண்டஞ் சென்று லக்ஷ்மிதேவியை யடைந்தனள்.

வைகுண்டத்தைச் சென்றடைந்த ஸ்ரீசரஸ்வதி தேவியின் வருகையைக் கண்ட மலர்மகள், ஆனந்தபரவசியாகி, "சகல கலைகளுக்கும் நிலயமான கலைமகளே! வரவேண்டும்" என்று பலவிதங்களா யுபசரித்து, ஆசனமளித்து இருவருமாகச் சம்பா ஷித்துக் கொண்டிருக்கும் பொழுது, வாணிதேவி, கடற்பிறந்த கோதையை நோக்கி சர்வலோகசரண்யனுகி, "இருளிரியச் சுடர் மணிகளிமைக்கும் நெற்றி, யினத்துத்தி யணிபணமாயிரங் களார்ந்த அரவரசப் பெருஞ்ஜோதி அனந்தன்" மீது சயனித்-

திருக்கும், ஸ்ரீமந் நாராயணனின் சேவையைச் சதாகாலமுஞ் செய்து கொண்டிருக்கும் ஹரிப்பிரியை! என்னை விட வெந்த விதத்தில் மற்றவர்கள் சிறந்தவர். "அஷ்ட ஐஸ்வரியங்களுக்கும் நிதியாயிருந்தபோதிலு முனக்கு என்னவ்வளவு கௌரவமுண்டா?; பெருமையுண்டா?; புகழுண்டா?; எந்த விதத்தில் நீயென்னை விடப் பெரியவள்" என்று அஹங்கார ஹிருதையாகிச்சொல்லக் கேட்ட "பூமின் மந்தஹாசஞ் செய்து." சரஸ்வதிதேவியே! என்னைவிடப் பெரியவளென்று வெளியில் சொல்லிக் கொள்ளும்படியான கௌரவமு முனற்கேற்பட்டு விட்டதா? என்ன! என்னை விடப் பெரியவ ளாவையா நீ? இவ்விஷயத்தில்,

"மானிற்கு மோவந்த வாளரி வேங்கைமுன் வற்றிச்செத்த
கானிற்கு மோவவ் வெரியுந் தழன்முன் கனைகடலின்
மீனிற்கு மோவந்த வெங்கட் சுறவமுன் வீசுபனி
தானிற்கு மோவக் கதிரோ னுதயத்திற் றூர்மன்னனே"

—ஒட்டக் கூத்தர்.

என்னுஞ் செய்யுளின் கருத்துப்படி யாமேயன்றி, எவ்விதத்திலும் நீயென்னைவிடப் பெரியவளென்று கூற திருமூர்த்திகளுக்கும் தைரிய முண்டாகாது. என் வீணில் வாதம்; வாக்கு சேதம்; மிகக்குரோதம்; போதும்; போதும். உன்னருள் பெற்று கவி இரத்தினங்களாயிலங்கும் பலர் என்னுடைய கடைக் கண் வீக்ஷண்யம் பெருமல் உணவிற்குக்கூட, வருந்துவதை விட வேறு சான்றும் வேண்டுமோ? உன் கடாக்ஷம் பெற்ற புலவர்களில் ஒருவர் "ஆம்பல் பூப்ப, தேம்பல் சுழல, இல்லிதூர்ந்த பொல்லா மார்பும், குழவி தாய்முகம் நோக்க, தாய் என்முகம் நோக்க யான் உன்முகம் நோக்கி வந்தனன் குமணா!" என்றும்,

மற்றொருவராகும் கம்பர்,

மற்கொண்ட திண்புயத்தான் மாநகர்விட் டிங்குவந்தேன்
சொற்கொண்ட பாவின் சுவையறிவா ரீங்கிலையே
விற்கொண்ட பிறைநுதலான் வேலி தருங் கூலி
நெற்கொண்டு போமளவு மில்லாய் நெடுஞ்சுவரே. ”

என்றும், பிறிதொருவரான சத்திமுற்றப் புலவர்,

நாராய்! நாராய்! செங்கால் நாராய்!
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!
நீயு நின் மனைவியும் தென்றிசைக் குமரியாடி
வடதிசைக் கேகுவீ ராயின்,
எம்மூர்ச் சத்திமுற்ற வாவியுட்டங்கி,
நனைசுவரக் கூரைக் கனைகுரற் பல்லிப்
பாடுபார்த் திருக்குமெம் மனைவியைக் கண்டு,
“ எங்கோன் மாறன் வழுதி கூடலில்,
ஆடையின்றி வாடையில் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலே தழீஇப்
பேழையு ளிருக்கும் பாம்பென வுயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனம் எனுமே ”

என்றும், உண்ணு முணவிற்கும், உடுக்கு முடைக்கும் வருந்தின ரன்றோ? இன்னு மெவ்வளவு வேண்டும். சொல்லியடங்காது. ஏட்டில் தீட்டக் கொள்ளாது. இவ்விதமிருக்க உன்னருள் பெற்றவர் நிலையும், உன் ஸ்திதியும் மகத்தானது என்று என்னிடங் கூற வந்தாயே. ” என்றாள்.

வார்த்தை வளர, இருவருக்கும் வாக்கு வாதங்கள் வலுக்க, பெருங்கலகம் விளைந்து விடும் போலாயிற்று. பின்பு, இருவரு

மாலோசித்து, தமக்குள் வாதம் செய்து கொள்வதில் பிரயோஜன மில்லை யென்றும், குபேரனையடைந்து தங்களுடைய விவகாரங் களைத் தெரிவித்துக்கொள்ள வேண்டுமென்றும் அதற்கிந்திரன் மொழியும் முடிவின்படி சம்மதப்படுவதாயும் தீர்மானஞ் செய்து கொண்டு, இருவருமவரவர் வாகனத்தின்மீதேறி இந்திரலோகஞ் சென்றனர். இன்னர் பிரானிவர்களிருவரின் தரிசனமுமேக காலத்தில் லபித்ததற்கு மிகவுஞ் சந்தோஷித்து. மரியாதையுடன் வரவேற்று குசலப் பிரஸ்னஞ்செய்து கொண்டிருக்குஞ் சமயத் தில் லக்ஷிமிதேவியும், சாரதாதேவியும் தங்கள் தங்களுடைய பெருமைகளைத் தெளிவாகக்கூறி நீண்ட பிரசங்கமொன்று செய்தனர்.

கோபதி தான் நடுநிலையாய், திராசுமுனைபோன்று நியாயங் கூறுவதாயும், தன்னிடம் மனஸ்தாபம் படாதிருக்கும்படிக்கும் முதலில் வேண்டிக்கொண்டு, இவ்விருவரில் ஸ்ரீ தேவியே, சரஸ் வதி தேவியைவிட சிறப்பதிகமுள்ளவளென்றும், அவளே ஜகத் ரூபமென்றும், அவளுடைய வீக்ஷிண்யமில்லையே லுலகம் நடங் தேறுதென்றுங் கூறித் தன்னபிப்பிராயத்தை வெளியிட்டான்.

பின்பு, காயத்திரிதேவி வெட்கமும், கோபமுமொன்றுகூடி திரண்டெழ. "ஏ, வஜ்ரபாணி! நீ யென்னை யவமதித்து அஹங் காரங் கொண்டவனுய் (தன்னஹத்தை யுணராதவனுய்) பூமினே பெரியவளென்று புகழ்ந்துரைத்ததாலிதோ உன்னைச் சபிக்கின் றேன். நீ மதயானை வடிவங்கொண்டு, பூமி வெங்கானத்தில், கரிக்கூட்டங்களோடு கூடி வசிக்கக்கடவை" என்றனள்.

குபேராதிபதி சர்வாங்கமுமொடுங்க பயந்து "நாமேனிவ் வாறு கூறவேண்டும்; நம்மதியே னிவ்வாறு இக்காலத்தில் குறையவேண்டும்; ஸ்ரீ பிரம்மதேவனையாவது அல்லது சாக்ஷாத் பரமசிவனையாவது கேட்டா லுங்களி லிவர்தான் பெரியவரென்

றறியக்கூடுமென்று சொல்லிவிட்டிருக்கக் கூடாதா?" என்று யோசித்து ஸ்ரீதேவியை நோக்கி "அஷ்ட ஐஸ்வர்ய நிதியே! எனக்கென்ன விமோசனம், உங்களுக்கு நியாயங் கூற வந்ததா லல்லவோ எனக் கிவ்வாரான சாப மேற்படலாயிற்று" என்று கேட்க, அதற்கு செல்வச் சிறுமி "மேகாதிபதியே! பூலோகத்தில் ஹிமாசலமென்றோர் பர்வத மிருக்கின்றது. அப்பெரும் வரையி னடிவாரத்தில் தண்டகாருண்ய மென்றோர் பெருவன முண்டு. அச்சோலையில் பரமபாகவதோத்தம பக்தசிகாமணியான ஸ்ரீ பிரஹ்லாதாழ்வான், ஜிதேந்திரியனாய்த் தபசியற்றிக்கொண் டிருக்கின்றார். நீயவரை யடையக்கடவை; அவருனக்கு ஞானோபதேசஞ் செய்வார். அவருடைய அனுக்கிரஹத்தால் சாதகம் பெற்று ஸ்ரீ காஞ்சிமஹா க்ஷேத்திரத்தை யடைந்து, ஆங் கெழுந் தருளியிருக்கும் ஸ்ரீ நரசிம்மப் பெருமா னனுக்கிரஹத்தால், சாப விமோசன முண்டாகப்பெற்று, கரிவடிவம் நீங்கப்பெற்று, உன்னுடைய நிஜரூபத்தை யடைந்து, மகிழ்வுற்று, உன்னுடைய பதவியை மீண்டும் பெறக்கடவை. வருத்தப்படுவதிற் பயனில்லை. யாவையும் நடைபெறவேண்டியிருந்தன; நடந்தேறின. விரைந்துசென்று நான் கூறியவாறு செய்வாயாக" வென் றியம்பி மறைந்தனள்.

பின்பு வஜ்ராயுதன் யானையின் வடிவந் தாங்கி, தண்டகாருண்யத்தை யடைந்து, ஆங்ககப்படக்கூடிய, கிழங்கு கனி வர்க்கங்களைப் புசித்து, பஞ்சயிந்திரியங்களையும் ஜெயித்து, காமக் குரோதாதிகளாகும் பெரும் பகைவர்களின்மீது வெற்றிகொண்டு மட்டில்லா மஹா தபமியற்றி ஸ்ரீமந் நாராயணனே முழுமுதற் கடவுளென்று, அவருடைய சரணாரவிந்தங்களையே எக்காலத்திலும் பஜித்துக்கொண்டு விளங்கும், ஸ்ரீ பிரகலாதாழ்வானை யடைந்து, அவருடைய கடாக்ஷ வீக்ஷண்யத்தால் கிருதார்த்த

ஞகி, ஸ்ரீ காஞ்சி மஹாக்ஷேத்திரத்தை யடைந்து ஆங்கெழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ நரசிம்மமூர்த்தியை பஜித்துக்கொண்டிருந்தான்.

வந்தே பங்கஜலோசனு சுககனு சுவாமி ஜகத்பாவனு.
அசிப்ரஹ்ம ஸனதனு திரிபுவனு ப்ரஹ்மரதிகாம்சாசனு
க்ஷீராப்திசயனு சுவர்ணவசனு தூர்புத்தி வித்வம்சனு
த்ராசிஹித்ராஹி நமோநமோ பகவதே லக்ஷ்மீபதே பாஹிமாம்.

என்று தன்னுடைய துதிக்கையை தூக்கித்தூக்கி, உள்ளங்கனிந்துருகப் பாடிப் பரவசமாகிக் கண்களினின்று தாரைதாரையாக நீரை யுருக்க சிலகாலம் தம் பக்திவலையை வீசினன். " கருமணியைக் கோமளத்தை " என்றூரல்லவா குலசேகராழ்வாரும்! கோமளமென்னும் பதத்திற்குப் பொருளுரைக்க யார் வல்லார்? கலைமகளே கலக்கமுறுவளன்றோ? பக்தி வலையைச் சரிவர வீசிவிடுவாளுகில் அஃதினின்றும் சர்வேஸ்வரன் தப்பிக்க முடியுமோ? தீனதயாளுவென்றும், ஆபத்பாந்தவனென்றும், அனுதரக்ஷகனென்றும், அடியார்கள் கதறிக் கூவி யழைக்கின்றனரன்றோ!

சில ஆண்டுகள் செல்ல, நரசிம்மமூர்த்தி தூணினின்று வெளிப்பட்டு பூர்வம் ஹிரண்யாக்ஷனை எவ்வாறு வயிற்றைக் கிழித்து, பிளந்தருளினரோ அது போன்ற இந்திரனை கரியின் வயிற்றைப் பிளந்து கிருபை கொண்டருள, இந்திரன் தன் கஜவடிவம் நீங்கப்பெற்று சுவயரூபத்தை யடைந்து சுயப்பிரகாசனுகி விளங்கிப் பணிந்தனன்.

நிற்க, அத்திகிரி எனப் பெயர் வழங்கலானதற்குக் காரணத்தைச் சற்றுராய்வாம். இந்திரன் யானைவடிவம் நீங்கப்பெற்று

தன் ஸ்வய ரூபத்தை யடைந்தபின்பு ஸ்ரீ நரசிம்மமூர்த்தி அந்த யானைவடிவை சிறு குன்றாக அனுக்கிரஹித்து தான் கிழித்தருளின வயிரான பாகத்தைக் குகையாகக்கொண்டு, அதனுள் எவ்வாறு முனிபுங்கவர்கள் பத்மாசனத்தில் வீற்றிருந்து தவமியற்றுவார்களோ, அதேபோல அமர்ந்து சேவை சாதித்தருளினர். இக் காரணம் பற்றியே யம்மலை அத்திகிரி யென்னும் பெயர் பெற்று சீருற்று ஏற்பெற்று விளங்கலாயிற்று. "வேண்டுவார்க்கு வேண்டுவன மற்றீவான் கண்டாய்" என்ற பெரியார் மேற்கோளிற்கிணங்க, விரும்பியவர்க்கு அவரவர் விரும்பியவற்றை அவ்வப்பொழுதே யீந்தருளும் திருமா லம்மலையின்மீது நிவாசம் செய்வதா லம்மலை சிறப்புமுடைத்து.

நிற்க, முன் தன் நிஜரூபத்தைத் திடமுட னடைந்த மேஹாதிபதி நரசிம்ம மூர்த்தியை வணங்கி விடைபெற்றுச் செல்லும்போழ்து அவ் வத்திகிரியினின்று, பிரம்மதேஜசும் இளமையும் லக்ஷணமும் பொருந்திய விருசிறுவர் வெளிவருவதைக் கண்ணுற்றான். அவர்களைக்கண்டதும், "நீங்கள் யார்? எங்கிருந்து வருகின்றீர்? உங்களுடைய விருத்தாந்தமென்ன?" வென்ற கேள்விகளைக் கேட்க வச்சிறுவர்கள் "உலகத்தில் பசுமையை யுண்டு பண்ணும் பாக்கியம் பெற்ற அண்ணலே! நாங்கள் ஸ்ருங்கிபேரரென்னும் தபஞ்ஞருடைய தவப்புதல்வர்கள். கௌதமமுனிவருடைய உத்தம சிஷ்யர்கள்; ப்ராம்மண குலத்தைச் சார்ந்தவர்கள்; எங்கள் சூத்திரம் வைகாசன சூத்திரம்; ஆச்சிரமம் பிரம்மச்சரியம்; ஹேமன், சுக்லன் என்பவை முறையே எங்களுடைய சர்மம். சகல யாகங்களுக்கும் கர்த்தாவாகி விளங்கும் கௌதம முனிவரிடம், நான்கு வேதம் ஆறு சாஸ்திரம், அறுபத்து நான்கு கலைஞ்ஞானம், தொண்ணூற்றாறு தத்துவம், வியாகரணம், தர்க்

கம், ஸ்ருதி, ஸ்மிருதி, மனு; முதலான சாஸ்திரங்களிற் வல்ல
பாண்டியத்தைப் பெற்றேம். அவருக்கு சிஷ்யர்களாக ஒழுகும்
நாளையில் ஒருநாள் ஆராதனைக்குத் தீர்த்தமும் ஹோமாதிகளுக்கு
சமித்தையும் கொண்டுவர ஏவினர். குருவின் பணியை சிரமேற்
கொண்டு, வெளிச்சென்று, கமண்டலத்தில் நீர் முகந்து, சுத்த
மான இடத்தில் வைத்து விட்டு, அரசமரத்தடிக்குச் சென்று,
சமித்துகளைப்பொருக்கி யெடுத்துக்கொண்டு, பின்பு, நீரையுங்
கொண்டு ஆச்சார்யனை யடைந்தோம். தீர்த்த பாத்திரத்தைக்
கீழே வைத்தமாத்திரத்தி லதினின்றும் ஓர் பல்லிதுள்ளியோடி
ற்று; மனந்திடுக்கிட்டுப்பதறினேம்; ஈஸ்வரா! நாங்களறியா
வண்ணம் நேர்ந்த விப்பிழைக்கு மன்னிப்பு கிடைக்குமா?"
வென்று மனம் பதைத்தோம். பின்பு "வருவன வந்தே தீரும்"
என்ற பழமொழி எங்கள் ஞாபகத்திற்கு வந்தது. ஆசிரியரோ
சினந்தார்; சினந்தவரிடத்து குண முண்டாயினும் ஆசானின்
திருவாயினின்று வெளிவர விருக்கும் மொழிக்கஞ்சினேம். அவர்
"நீங்கள் தீர்த்தபாத்திரத்தை மூடாத காரணத்தாலன்றோ இப்
பல்லி விழலாயிற்று. ஆராதனைக்கு நீங்களிருவரும் அபசாரம்
செய்தமையின் நீங்கள் பல்லிகளாகக் கடவீர்கள்" என்று சபித்
தனர். நாங்கள் சாபத்திற் காற்றுதவர்களாகி "ஞானத்தாயே!
சிறுவர்களறியாது செய்த விகுற்றத்திற்கு இச்சாபம் பெரி
தன்றோ? ஆறறிவைப்படைத்தவராகி 'வதினின்றும் ஈரறிவு
டைய பிராணியாவது தங்களைப் போன்ற பெரியார்களையடுத்த
சிஷ்யர்களுக்கழகோ? இச்சாபங்களை நீங்குமாறு அனுக்கிர
ஹஞ்செய்ய வேண்டும். தயைகொளல் வேண்டும்; காருண்யம்
வேண்டும்; அன்பு வேண்டும்; அருள் வேண்டும்; அன்புக்கடலே
அருளினுருவே" என்று பிரார்த்தித்தோம். உடனே குருவும்
மனமிணங்க முள்ளவராகி "என்னருமை சிஷ்யர்களே! மோக்ஷ

த்தை யெளிதிற் கிடைக்கச் செய்யும் சப்த க்ஷேத்திரங்களில் மேலானதாகும் ஸ்ரீ காஞ்சி க்ஷேத்திரத்தையடைந்து வசியுங்கள். நீங்கள் வசிக்கும் விருக்ஷத் தண்டையில் பூர்வம் சரஸ்வதி தேவி யால் சபிக்கப்பட்டு யானைரூபங் கொண்டலையும் இந்திரனங்கு வருவான்; அவன் நீங்கள் வதியும் மரக்கிளையை தன் துதிக்கை யால் வளைத்து முறிக்கும் போழ்து உங்களுடைய சாபம் நீங்கி நிஜரூபத்தை யறியக்கடவீர்கள்" என்று தன்னளியுடையவராய் மென்மொழி புகன்றருளினார். அவ்வாறு இந்நாளெங்கள் சாபம் நீங்கி, நரசிம்மப்பெருமானை தரிசித்துச் செல்கின்றோம்." என்று விஸ்தாரமாய் தங்கள் விருத்தாந்தங்களையெடுத்தோதினர். இச் சிறுவர்களின் வரலாற்றைக் கேட்டு சந்தோஷமுற்று விடையளித் துச் சென்றனன்.

பின்பு, அத்திகிரியில் தன்னுடைய சாபமும், அவ்விரு சிறு வர்களின் பாபமும் நீங்கிய மகிமையை விளக்க, சுவர்ணத்தாலும், வெள்ளியாலுமிரண்டு பல்லியினுருவங்களை மேலே பிரதிஷ்டை செய்து, இவ்விரு பல்லிகளையும் ஸ்பரிசித்து நின்று அத்திகிரி தரிசனஞ் செய்கின்றவர், விரதபலனையும் சற்கதியையும் அடை யக்கடவ"ரென்று வரமளித்துத் தன்னுலகை யெய்தினன். அவ் வாறு உள்ளன்புடன் சென்று வணங்குகின்றவர் சத்கதியை யடைவரென்பது புராணத்துணிபு. இன்றளவும் க்ஷேத்திரவா சிகளவ்வாறு செய்துவருவதைக் கண்கூடாகக் காணலாம்.

இஃதுநிற்க, முதலிற் கூறியதற்கிணங்க, அஹங்காரத்தால் தங்களுடைய பெருந்தன்மையை நிர்ணயிக்க, பலலோகங்களையும் சுற்றிவந்தனர் நாமகளும், பூமகளும். இந்திரனடைந்த கதியைக் கண்டஞ்சிய தேவர்கள், தங்களுக்கவ்வள வறிவில்லை யென் றும், மற்றவர்களைக் கேட்டா லவர்களுடைய பிரபாவந்தெரியு

மென்றுங் கூறிக்கழித்தனர். பின்பு சரஸ்வதிதேவி, "நம்முடைய கணவன் சிருஷ்டிகர்த்தா; முத்தொழிலிலும் முதற்றொழில் புரிகின்ற பிரபு! ஜிதமாரர்; வேதசாரர்; அவர்களையன்றி மற்றவர்களைக் கேட்பானேன். தவிர, நம்முடைய கணவராதலின், நம்முடைய இன்பவலையிலகப்பட்டவராதலின், நம்முடைய சார்பாகவே முடிவு சொல்லுவார்." என்ற எண்ணங்கொண்டு, ஸ்ரீதேவியுடன் ஸ்ரீ பிரம்மதேவரை யடைந்து தங்களுடைய விருத்தாந்தங்களை தெளிவாக வெடுத்துக் கூறித் தீர்மானத்தை எதிர்பார்த்தனர்.

சதுர்முகன் சரஸ்வதி தேவியை நோக்கி "நீ வீணில் ஸ்ரீதேவியை எதிர்க்க வேண்டாம்; நான் மாலுந்தி வந்தோன்; லக்ஷ்மி தேவி என்னுடைய தாய்; உனக்கு மாமியாகவேண்டும். வீணில் கௌரவங் கொள்ளாதே; நானுன்னைப்போல வஹங்காரங் கொண்டலைந்து திரிந்து அடங்கினவன்; நடு நிலைதவறாமல் முடிவுரைக்கில் ஸ்ரீ லக்ஷ்மி தேவியே யுன்னைவிடச் சிறந்தவள்;" என்று விடை பகர்ந்தனர்.

சரஸ்வதிதேவி மனங்கலங்கி, தம்முடைய துணைவரே தனக்குமாறான தீர்மானத்தைச் சொல்லியதால் விசனமுற்று, தனது நாயகனுனது பற்றி இந்திரனைப்போன்று சபிக்கவுமிடமில்லாமல், மஹா விஷ்ணு விடமிருந்து சிருஷ்டி யாச்சமாய் ஸ்ரீ பிரம்மதேவன் பெற்றுள்ள சிருஷ்டி தண்டத்தை வலுக்கட்டாயமாய்ப் பிடுங்கிக்கொண்டு சென்று, ஒளிந்து கொண்டனள். கோலில்லா குரங்காட்டியைப்போலும் ஸ்ரீபிரம்மதேவன் சிருஷ்டி தண்டத்தை யிழந்த காரணம்பற்றி ஆக்கலென்னும் வலிமையிழந்து "என்ன விபரீதம்! உள்ளதைச்சொன்னால் யாருக்கும் கோபம் வருவது இயற்கை! என் சிருஷ்டி தண்டமவளுடைய

அம்சமாயிருந்தபோதிலும், அதை நானவனிடமிருந்து பெறவில்லையே. சர்வோத்தமனான ஸ்ரீமந் நாராயணனன்றோ நமக்கவ்வாக்கும்கோலை யக்ஷித்த பெருவள்ளல்! பர்த்தாவிற்கு துரோகஞ் செய்தவளை சத்துருவென்றல்லவோ நினைக்கவேண்டும். இனியவள் முகத்தையே திரும்பிப்பார்ப்பதில்லை, நமக்கு யாரத்தண்டத்தை யளித்தாரோ அவரையே யடைந்து நாம் தண்டத்தைப் பெற்று வருவோமென்றுறுதிகொண்டு ஹிமாசலத்தை யடைந்து தபஞ் செய்யத்தொடங்கினாராம். சிருஷ்டிக்கோர் தடையேற்பட்டது கண்டது சகலதேவருமதிசயித்தனர். சாதாரணமான முனீஸ்வரர்கள் செய்யுந்தபத்தையே விசேஷமாகக் கூறுங்காலத்தில், ஸ்ரீபிரம்ம தேவனே செய்யுந்தபத்தின் மகிமையை நாம் வர்ணிக்க முடியுமோ? நான்முகனுடைய தபோஜ்வாலை யானது பிபீலிகாதி பிரம்மபர்யந்தம் வீசியது. தேவர்கள் பயந்தனர். ஹரால் மனமகிழ்ந்து, உடனே புறப்பட்டு ஹிமோத்கிரியை யடைந்த பிரம்மதேவனை விளித்து" நான்கு திருவாக்குகளாலும் ஈரிரண்டு வேதங்களை வெளியிடும் பெரியோய்! நீ செய்யுந்தபசின் காரணம்யாது?" எனக் கபடஹிருதயனாய் கேட்டருள, ஸ்ரீபிரம்மதேவன் எழுந்து விரைந்தடிபணிந்து "ஹே சர்வபரிபூரணா!; சர்வோத்கிருஷ்டா!; அமிர்த பராக்கிரமா! சகலலோக நிவாஸா! அப்ரமேயா! அவாங்க் மனோகோசரா! ஆதிமத்ய அந்தரகிதா! சர்வசக்தா! சர்வாபீஷ்ட பிரதாவா! முமுக்ஷுத்வத்திற் கதிகாரியாகு முன்னை யானெவ்வாறு புகழ வல்லேன். என்னுடைய ஜென்மமின்றே சாபல்யமாயிற்று: இன்றே நன்னாள்" எனப்பலவாறு மொழிந்து, "ஐயே! என் சிருஷ்டி தண்டத்தை சரஸ்வதிதேவி யபகரித்துச் சென்றனள். அத்தண்டமின்றி யண்டத்தை யெவ்வாறு சிருஷ்டிக்க முடியும்? ஆனதுபற்றி, ஆக்கலென்று மருந்தொழிலுக்கு பின்ன மேற்பட்டு

நின்று விட்டது. இவ்விஷயத்தில் கேவலம் மனைவியைச் சென்றுக் கெஞ்சிக் கேட்பதி லெனக்கு மனமில்லை, பின்பு உன்னையன்றி வேறுயாரை யான் கேட்கக்கூடும்? அத்தண்டத்தை யவளம்சமாக வெனக்குத் தந்தருளியவர் நீரே யாதலின் தாமேயதை யெனக்குத் தந்தருளல்வேண்டும்." என்று வினயத்துடன் தெரிவித்துக்கொண்டார்.

கார்மேகவண்ணனும் கண்ணனிதைக்கேட்டு "பிரம்ம! நீரிவ்வுலகில் நூறு அஸ்வமேத யாகங்களைச்செய்வீராகில் சிருஷ்டி தண்டத்தைப் பெறக்கூடும். ஆயின், சதயாகங்களைச் செய்வது அசாத்யமானதாலும், காலப்போக்காகுமானதாலும், உலகமுய்ய சிருஷ்டி தற்போழ் தவசியமானது பற்றியும், ஒருபாயம் கூறுதும் கேண்மின்! முக்திபை எளிதிற் சித்திக்கச் செய்யக் கூடிய எழு திருப்பதிகளுண்டு. அவைகளிலொன்றான காஞ்சிக்ஷேத்திரத்தை யடைந்து, அத்திகிரியின் சன்னிதானத்தில் அஸ்வமேத யாகஞ் செய்வீராகி லந்த ஹோமகுண்டத்தினின்று என்முகமாய் ஓர் சிருஷ்டி தண்டத்தைப்பெற்று உம்முடைய தொழிலை யினிது நடத்துவீராக. கவலை யொழிந்து புறப்படும்." என்றருளி மறைந்தனர்.

பின்பு பிரம்மன் ஆனந்தரகிதனுப் புறப்பட்டு ஸ்ரீ காஞ்சியை யடைந்து, ஸ்ரீ நரசிம்மமூர்த்தியி னனுக்கிரஹம் பெற்று, அன்னுன் சன்னிதானத்தின் மேற்பக்கலிற் சென்று தம் யாகத்திற்காகவேண்டிய பிரயத்தனங்களைச் செய்யவாரம்பித்தனன்.

ஆயதற்குரியன கலப்பை யாவையும்
ஏயெனக் கொணர்ந்தனர் கிருபர்க் கேந்தலும்
தூயநற் புனல்படியிச் சுருதி நூன் முறை
சாய்வறத் திருத்திய சாலை புக்கனன்.

முழங்கழன் ஓம்மையு முடுகி யாகுதி
வழங்கியே யீரனு திங்கள் வாய்த்தபின்
தழுங்கின துந்துமி தாவில் வாகனம்
விழுங்கினர் விண்ணவர் வெளியின்றென்னவே—கம்பர்.

என்றவாறு தேவசிற்பியை யழைத்து மறைகளிற் கூறிய வாறு, யாகசாலைகளையும், வருகின்ற மஹரிஷிகளும், தேவர் களும் தங்குமிடங்களையும், வித்வான்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்தும் சபாமண்டபங்களையும், சீர்பெற வியற்றினர் பத்திரிகை யனுப்பவேண்டிய விடங்களுக்கு மறவாது யாக வோலை வழங்கி, ஐம்பத்தாறு தேச மன்னவர்களையு மின்னு மனேக பிரமுகர்களையும் வரவழைத்தனர். தான் செய்யும் யாகத் திற் கோர் விக்னமு மேற்படக் கூடாதென்று கைகூப்பி,

இருணியா யெழுந்தசோதி யிரணியாக்கனைத் தான்கொல்ல
மூரணுறு மசுரனுன விரணியன் முனிவினேடு
மருணய மிலாதகால கேகயநக் கரன்கிரிட்டான்
கருணையில் காழிசாப னிவரொடுங் கழறலுற்றன் — பாகவதம்
என்றும்,

பிரணவந் தனில் வைகும் பெருமையோ
னரணிதன்னி லமர்ந்திடு மங்கிபோல்
முரணுறுமெ னிலண்டங்கள் மொய்த்துளான்
மரணமென்னும் வரம்பு கடந்தவன் — பாகவதம்.

என்றும், பெரியார்கள் கூறியபடி, ஸ்ரீ பிரக்லாதாழ்வானுக்குத் தூணினின்று வெளிப்பட்டு துஷ்டநிக்ரஹஞ் செய்து பிரக்லா தாழ்வான் பக்தி விக்னப்படாவண்ணங் காத்தருளிய கருணைத் தடங்கடலே!'' என்று நரசிம்ம மூர்த்தியைப் போற்றி, அழகும் வலிமையும் பொருந்திய பரி யொன்றை நியமித்து அதற்கு

ஸ்நானஞ் செய்வித்து, மந்திரபூர்வமாகவுஞ் சுத்திசெய்து, நீல சுவர்ண வர்ணங்களுள்ள வஸ்திரங்களை யுடுத்தி, அதன் முகத்தில் தங்க எட்டில் தீட்டிய பட்டமொன்று கட்டி சுயேச்சையாக விட்டு, யக்ஷ, கின்னர, கிம்புருஷ, காந்தர்வ, ராக்ஷஸர்களால் யாதொரு விக்னமு மேற்படாவண்ணங் காத்து, ஜெயஜெய வென்று தேவர்களும், மஹரிஷிகளும் ஆரவாரிக்க வக் குதிரையைக் கொணர்ந்து யாகசாலையிற் கட்டினன். யாகம் நடந்தேறுவதற்கு ஓர் பெருந்தடை யேற்பட்டதே யென்று மனங் கலங்கினார்; தர்ம பத்னி யில்லாது யாகஞ் செய்வது சிறப்புடைத்தன்று என்னு மெண்ண .மவருள்ளத்தை யாட்கொண்டது; என் செய்வார்; தன் பத்னியாகும் நாமகளோ ஒளிந்துகொண்டு யாகத்தைத் தடுக்கவேண்டிய யத்தனங்களைச் செய்துகொண்டிருக்கின்றனள். 'துணையின்றி மனையி லெவ்வாருட்காருவது' உண்டியளிப்பதில் தாயைப்போலும், ஆலோசனையுரைப்பதில் மந்திரியைப்போலும், போகங்களில் தாசியைப்போலும் நின்று நாம் இல்லறதர்மத்தை நடாத்துவதில் முக்கிய துணையாகும் மனைவியின்றி செய்யும் யாகம் சாஸ்திர விரோதமன்றோ! பிரம்மன் சிறிதாலோசித்து, உசிதமல்லவாயினும், அதற்குப் பிராயச்சித்த முண்டென்பதைக் கொண்டு, மந்திரத்தினாற் றன் மனைவியையாவாகித்துக்கொண்டு, முக்கண்ணனுடைய புதல்வனாகி விளங்கும் குமரக்கடவுளை உதவியாகவும், மணிகண்டேஸ்வரரை உத்காதாவாகவும், வருணனைச் சோமமாகவும், "காலமறிந்துயிரைக் கோணினைக்குங் காரணத்தால் காலனெனு மறிய காரணப்பேர் சாலப் படைத்த" எமதர்மராஜனை சஸ்திரமாகவும் தேவ காந்தர்வாதி அப்சர சித்தசாத்யர்களை மற்றைய சில்லரை யுதவிகளைச் செய்வதற்காகவும், சதானிகரை யாகத்தை நடாத்துவிக்கும் புரோகிதராகவும் கொண்டு, மந்திரங்களை யுச்சரித்து அவ் வத் தேவர்

களைப் பூஜித்து, வபையை யெடுத்து ஹோமஞ் செய்ய வாரம்பித்தார். மந்திர சப்தமானது ஒன்றுகூடி ஆகாசத்தை யடைந்து எஞ்சி நித்திரைசெய்யும் தேவர்களை எழுப்புவது போலாயிற்று.

இது கண்ட சரஸ்வதி தேவியார் "நமது கணவன் செய்த காரியம் நன்று! நன்று! தர்மபத்னி யின்றி செய்யும் வேள்வியை தேவர்களு மெவ்வாறபிர்ந்தனரோ தெரியவில்லை எந்த சாஸ்திரத்தை யாதாரமாகக் கொண்டு துணைவி யின்றி அஸ்வமேத யாகத்தைச் செய்யத் துணிந்தனரென்றும் புலப்படவில்லை இந்த யாகம் நிறைவேறும்படி விட்டுவிட்டால் முதலில் ஸ்ரீதேவியே என்னைக் கண்டு நகைப்பள்; பின்பு, தேவர்களு மென்னை அலக்ஷியமாகப் பேசுவார்கள். இதெல்லாவற்றையுங் கடக்க விட்டாலும், நம்முடைய கணவன் பத்னி யில்லாமல் யாகத்தைச் செய்தனரென்று உலகம் பழிக்கவன்றோ மேரிடும் ஆவியை யிழப்பினும் பழிப்பிற் கிடந் தருவது உசிதமானதன்றே. ஆகையா லிந்த யாகமெவ்வாருகிலும் நடைபெருவழியைச் செய்வது நம்முடைய கடமை" என்றெண்ணி, அக்கினியே முனிவுகொண்டு தன்னுருவோ டெழுந்ததுபோலும், மாயாக்னி ரூபுங்கொண்டு யாகசாலையைக் கிட்டி, யாங்கு எழுந்தருளிய தபஞ்ஞர்களையும் தேவர்களையு மிம்சிக்கத் தொடங்கினள்.

யாகத்தை நடைபெறச் செய்கின்றவர் யார்? யாருடைய துண்டுகோலால் யாகமாரம்பிக்கப்பெற்றது? ஸ்ரீமஹாவிஷ்ணுவன்றோ விதற்குக் காரணபூதமாய்த் துலங்குகின்றவன். யாகத்தை நடத்துமாறு சூழ்ச்சி புகட்டி யவனுடைய கடமையன்றோ வவ்வேள்வியை பங்கமின்றி நடந்தேறச் செய்யும் வகை! பூர்வம் ராமாவதாரத்தில் திருவின் கேள்வன் 'விஸ்வாமித்ர மஹாமுனிவருடைய வேள்வியை அம்முனிவன்.

தருவனத்துள் யாணியற்றுந்தவவேள்விக் கிடையூராத் தவஞ்
செய்வோர்கள், வெருவரச் சென்றடை காமவெகுளியென
நிருதரிவட விலக்கா வண்ணம், செருமுகத்துக் காத்தியென
நின்சிறுவர் நால்வரினுங் கரியசெம்மல், ஒருவனைத்தந்திடுதி
யென வுயிரிரக்குங் கொடுங்கூற்றி னுளையச் சொன்னான்.

—கம்பர்—

என்று கேட்கவே புறப்பட்டுச் சென்று முனிவன் வேள்வியை நடைபெருவண்ணஞ் செய்யுமாறு கொடிய அரக்க மிருகங்களையுங் கொன்று, பின்னும் யாககாலத்தில் யாதொரு விபரீதமும் நிகழாவண்ணம், தான் தம்பியொடும், பயபக்தி விஸ்வாஸத்துடனே,

எண்ணுதற் காக்கரிதிரண்டு மூன்று நாள்
விண்ணவர்க் காக்கிய முனிவன் வேள்வியை
மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்
கண்ணினைக் காக்கின்ற விமையெனக் காத்தனர்.

— கம்பர்.

விஸ்வாமித்திரன் வேள்வியைக் காப்பாற்றிப் பரிசாகத் தோடாவாரும் சீதையைப்பெற்றுக்கொண்டுத் திருவயோத்திக்குத் திரும்பவில்லையா? அவனருளாலே யன்றோ பிரம்மனும் வேள்வியை நடத்தலானான். அவ்வேள்வி யிடையூரின்றி நடந்தேறுவது தன் கடமையெனக் கண்ட மால், அத்தணலைத் தன் கரத்தால் வலிவுடனேந்தி "திவ்ய பிரகாச மூர்த்தி" யாகி சேவைதந்தருளினர். ஆனால் சரஸ்வதிதேவி யஞ்சின ளல்லள்; யாகத்தைத் தடுக்கக் கங்கணம்பூண்ட நாமகள் அதை நீக்கிக் கபலாஸ்திரத்தை மந்திரபூர்வமாகப் பூஜித்து யாகத்தைத்தடுக்க ஏவினள். எக்யத்தைக் காப்பாற்றுவ தென்று முரிமை பூண்ட

ஸ்ரீமந் நாராயணன் தான் ஹிரண்யனை சம்ஹாரிக்க வெடுத்த ரூபமிஃதென் றுணர்த்துவார் போன்று சிம்மரூபங்கொண்டு அக்கபாலாஸ்திரத்தை பக்ஷித்தருளினர். "வெள்ளைக்கலையுடுத்து, வெள்ளைப்பணிபூண்டு, வெள்ளைக்கமலத்து வீற்றிருக்கு" முன்னை முனிவு மென்மேனுஞ் சனிய, கொடிய அசுரகணங்களையேவி வேள்வியை நடைபெறா தொழியச்செய்தனள். மாலு மவர்களுக்குக் காலாந்தகனாகி தான் நிஜ ரூபத்தோடு விளங்கினர்

பின்பு, செஞ்சொல் வஞ்சி காளிரூபத்தை யேவ, அக்கொடிய ரூபத்தை இருநான்கு கைகளுடையாராய் தோன்றியருளிய சக்ராயுதன் வளைத்துத் தள்ளி, சிரசின்பேரில் தன்னடியை வைத்தழுத்தி சம்ஹரித்து "அஷ்டபுஜ" னென்ற திருநாமத்துடன் எருந்தருளியிருந்தார்

"பெருந்திருவுஞ் ஜெயமங்கையுமாகி யென் பேதை நெஞ்சிலிருந்தருளுஞ் செஞ்சொல்வஞ்சி" யின் மேற்கண்ட உபாயங்கள் பலிக்காமற்போகவே, ஆலோசனை செய்ய வாரம்பித்தனள். கல்விக்களஞ்சியமாம் கலைமகளுக்கு மற்றோருபாயம் தோன்றிற்று. கட்டுப்படுத்தக்கூடாத நீர்ப்பெருக்கெடுத்து யாகசாலையை வளைத்து நாசஞ்செய்ய வேண்டுமென்று துணிந்தனள். பின்பு, கங்காதேவியானவள் பகீரதாள்வானுக்காக பூலோகத்தில் வருங்காலத்து எவ்வளவு வேகத்தோடு முக்கண்ணன் சிரசிற் புகுந்தனளோ, அவ்வேகத்தைவிடப் பதின்மடங்கு தோன்ற, அதிவேகமாய் புறப்பட்டு, பாற்கடல் பொங்கிவருவது போலும், ஆவேசத்தோடு யாகசாலையை நோக்கிப்பாய வாரம்பித்தாள். யாகசாலைக்கெழுந்தருளிய யாவரும் பிரவாகத்தின் சப்தத்தைக் கண்டச்சங்கொண்டார். மீண்டெழும் அலைகளின் துமியானது விண்ணை யடையலாயிற்று.

"பவளவாய் கமலச்செங்கண் அச்சுதன்" நாமகளே யிவ்வுருவங் கொண்டிங்கு வந்துற்றளெனத் தெரிந்து கொண்டு யிவளையடக்க, நாமதிகச் சிரமப்படவேண்டியதில்லை. மானபங்கமேற்படுங் காலத்திலப்பணியில் பதிவிரதைகள் பிரவேசிக்கமாட்டார்கள்; ஆகையால், நாம் எளிதிலிவளை வென்று யாகத்திற்கு யாதொரு ஹானியுமுண்டாகாதவாறு காத்தருளல் வேண்டுமென்றெண்ணினர். "கருமணியைக் கோமளத்தை" என்றல்லவோ பெரியபெருமாள் தம் திருமொழியில் முதற் பாசுரத்திற் கூறியருளினர். பிரம்மதேவனிடம் பூரண அன்பு கொண்டு, அன்னோனியற்றும் அஸ்வமேதயாகத்தை நிறைவேற்றுங்காலையில் யாதொருஇடையூறும் வாராது தடுக்க நின்றருளிய பெருமான், எளிதிலிவ்விடையூறை நீக்க, அப்பிரவாகத்தின் முன்னிலையில் நிர்வாணமாக சயனித்தருளினர். அதிகவிரைவாக வந்தபடியால் வேகவதி என்ற பெயர் பெற்ற சரஸ்வதி தேவியானவள், தன் கோபாவேசங்களெல்லாம்போய், அஹங்காரம் விலகி அத்தருணந்தான் தான் பெண்ணென் றுணர்ந்தாள். நிர்வாண ரூபத்துடன் வீற்றிருக்கும் மாலைக்கண்டு, உடல் குருகி, நாணங்கொண்டு "ஆடவருக்கிவ்வாறு செய்தாலழகோ," நம்மையெதிர்க்க முடியாவிடி லிவ்வாறு வந்துருவது ஆண்மைத்தன்மை நிரம்பிய பணியாகாதே. நாம் யுக்தா யுக்த பரிஞ்ஞான மில்லாமல், மானமிழப்பதா!" என்றெண்ணிக் கூடிநு விலகினள்.

இவ்விடத்தில் நம்வாசகர்கள் முக்யமாகக் கவனிக்கவேண்டிய சில நியாயங்களுண்டு. நம்முடைய புராண இதிஹாசங்களில் லான்றோர் அனுபவத்தையும், சித்தாந்தத்தையு மொட்டியே ஒவ்வொரு விஷயங்களையு மெழுதி வைத்துள்ளார்கள். நாம் புண்ணியத்துறைகளாடும்போழ்து, நிர்வாணமாக நீராடுதலை புராணவாயிலாக விங்கு தடுத்தனர். நமக்கு ஜீவாதாரமாக வுள்ளவை

களில் நீர் முக்கியமானது. அப்புனலை யீந்தருளும் நதியை நாம் தெய்வமாகக் கொண்டாடுவதும் முறை. மேல் நாட்டார் நதிகளைத் தந்தையென்று சாலப்போற்றுவார்; பாரதநாட்டார் நீர்த்துறைகளை தாயாகவே கருதி பூஜிப்பார். இவ்விருவருடைய கொள்கைகளி லெவருடைய அபிமான மானது சிரேஷ்டமானதென்று நா மாராயவேண்டும். "மாதா, பிதா, குரு, தெய்வம்" என்று ஸ்மிருதிகள் கூறுகின்றன. தாயைத்தான் நான்கும் மிகவும் போற்றுகின்றன. "தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை" யென்றும், "தாயோடறுசுவைபோம்" என்றும், "தாயொக்கு மன்பில்" என்றும், கூறினர் தமிழில் வல்ல, அவ்வையும் கம்பரும், உதாரணமாக; ஸ்ரீராமபிரானைவிட, கௌசல்யாதேவிக்கே யுயர்வு; இராமசந்திரனைப் போற்றி நின்ற கம்பர் "சுற்றத்தார் தேவரொடும் தொழ நின்ற கோசலையை" என்றார். கொல்லிக் காவலனும் குலசேகரரும் "மன்னுபுகழ் கௌசலை தன் மணி வயிறு வாய்த்தவனே" யென்றருளிச்செய்தனர். ஆனது பற்றியே, நம் புண்ய பூமியில் நதிகளைத் தாயென்றபிமானிக்கும் தன்மை யேற்படலாயிற்று. தாயை தெய்வமென்று நாம் கருதுவதால் தாயை யொக்கும் நதியையும் நாம் தெய்வமெனப் போற்றுகின்றோம். "நதியையாவது தெய்வமென் றெண்ணவாவது" என்று மேல் நாட்டார் நம்மைக் கேலிசெய்வதுண்டு. ஆனால், அவர்களுக்கு இதனந்தரார்த்தம் தெரியவில்லையே யென்று நாமவர்களைக் கேலிசெய்ய வேண்டியவர்களாகின்றோம். நமக்குபகாரஞ் செய்கின்றவர்களை தெய்வமாக பாவிப்பது நம்முடைய ஆன்றோர்களின் முக்ய கொள்கை யென்பதை யவர்களறியவேண்டும். அத்தாயினிடத்து மரியாதைகாட்டி நமஸ்கார பூர்வமாய் பூஜித்து ஸ்நானஞ் செய்யவேண்டும். நிர்வாணமாக ஸ்நானஞ் செய்பவர்களுக்குப் பாபஞ் சம்பவிக்கும். தவிர, நீரில், மச்சம்

முதலான நீர்வாழும் ஜந்துக்கள் வசிக்கின்றன. அவை நமது தேகத்திற்கு யாதொரு கெடுதியையுஞ் செய்யாவண்ணம் காப்பாற்ற நாம் வஸ்திரத்தோடு ஸ்நானஞ் செய்ய வேண்டு மென்பதும் அனுபவபூர்வமான உண்மை.

பிறகு, சிருஷ்டி தண்டத்தைப் பெற யாகஞ்செய்யும் பிரம்மதேவன், மஹாவிஷ்ணு தன்னிட மிவ்வளவு கருணை காட்டியதைக் கண்டு, பரமானந்தங்கொண்டு, மீண்டு, "ஏ! ஆபத்பாந்தவா! அவாங் மனோகோசரா! அப்ரமேயா! ஆதி மத்யந்தரகிதா! நிஷ்களங்கா! நிர்விகாரா! சத்யசந்தா! காருண்யதாமா! ஏமோதைபூமா! கௌசல்யாதேவிக்கு திவ்யதரிசனந் தந்த சோமா! அஹல்யையின் சாபவிமோசனஞ் செய்தசீமா! ஹே ராமா! உன்னுடைய கல்யாண குணங்களையும் அடியாரிட மீடுபாட்டையும், யா னென்னென்றுரைப்பேன். நான்கு வேதங்களுக்கு மதிகாரியான உன்னை யா னெவ்வாறு புகழ்வேன். நான்கு திருவாய்களை மலர்ந் துன்னை யெவ்வாறு பாடுவேன்" என்று ஸ்தோத்திரஞ்செய்து, ரிஷி தேவகணங்களுடன் திருமாலைவணங்கி, அம்மாலி னருளுக்கே மையல்கொண்டு, ஆனந்த பாஷ்பஞ் சொரிந்து நின்றார். மஹரிஷிகளும் மனமகிழ்ந்து தாமிச் சந்தர்ப்பத்தி லங்கு வந்துறநேர்ந்தது தம்முடைய பூர்வ ஜென்ம சுகிர்தத்தின் பலனே யென்று மகிழ்வுற் றிருந்தனர். யாகம் வேதவிதிப்படி நிறைவேறி இந்திரன் முதலான தேவதைகளுக்கு கொடுக்கவேண்டிய ஹவிஸ்களை யெல்லாம் முறைமேய் கொடுக்கப்பெற்று சகலரும் திருப்தாஸ்தர்களாயினர்.

பின்பு, ஹோமகுண்டத்தி னின்றும், ஆயிரஞ் சூரியனுடைய வொளிதிரண்டாற் போலும், திவ்ய தேஜோமயமான திருமேனியுடன்,

"மண்டலம் நிறைந்த திங்கள் வதனமுங் கமலக்கண்ணும்
குண்டலஞ் சுடருங் காதும் குருநகைப்பவளவாயும்
தண்டுழாய் அலங்கல் மார்பும் தடக்கையோர் நான்குமாகக்
கண்டனன் மறையுங்காணாக் கரியவனுருவமம்மா !"

துருவன்.

என்பதுபோல வரதராஜன் தனக்குறிய இலக்கணங்களோடு தோன்றி சிருஷ்டி தண்டத்தை தந்தருளினர். பிரம்மன், தன் தலையீற்றுக் கன்றின் வருகையைக்கண்ட காராம் பசுவைப்போலும், மணல் நிறைந்த பாலைவனத்து ளகப்பட்டு தாகத்திற்கு நீரகப்படாமல் தபிக்குமொருவன் நீர் நிலையைக் கண்டாற்போலும், நெடுநாளாக கொடுநோயால் பீடிக்கப்பட்டவன் வல்லமையுள்ள வைத்தியனைக் கண்டாற்போலவும், இளமை மிகு மனைவியின் வருகையை வெகுநாட்களாக எதிர்பார்த்து நின்ற ஆடவன் அம்மனைவியைப் புன்னகையுடன் கண்ணுற்றது போன்றும், பாண்டியநாட்டு மன்னன், தமிழ் புலமையிற் சிறந்து வதிந்த காலையில், நாரையின் அலகிற்கு ஒப்பகப்படாது வருந்தியகாலை, சத்திமுற்றப் புலவர் "பழம்படுபனையின் இளங்கு பிளந்தன்ன பவளக் கூர்வாய் செங்கால் நாராய்" என்றடி யெடுத்துக் கொடுக்கக் கண்டு, மகிழ்வுற்றதுபோலும், சிருஷ்டி தண்டத்தைப் பெற்றுக்கொண்டு, தன் மறைபுகலும் மணிவாயால், மாலை மனமாறப்போற்றி,

"வேண்டுவார்க்கு வேண்டுவனயீந்தருளும் வள்ளலே! சரஸ்வதி சிருஷ்டி தண்டத்தை யென்னிட மிருந்து வலுவிற் பிடுங்கிச் சென்றகாலத்திலெனக்கு சிருஷ்டி தண்டந் தருவான் கண்டு யாகத்தைச்செய்ய ஏவி, அவ் வேள்வி நன்கு நடந்தேறுவண்ணஞ் செய்யவேண்டி, பல இடுக்கண்களைப்புரிந்த அவ் வெள்ளைக் கலையுடுத்தாளை பங்கப்படுத்தி, அஸ்வமேத யாகத்தை நன்கு நடந்தேறச் செய்த நின்

காருண்யத்தை நானெவ்வாறு புகல்வது! உலகமும் நானுமுய்ய சிருஷ்டி தண்டத்தை யீந்த கருணாநிதே" என்று மனமுவப்ப மாலைப் போற்றி நின்றார்

இச் சம்பவம் நிகழ்ந்தகாலம், சுவேத வராஹ கல்பகம், ஐந்தாவது வைவஸ்தமனு, க்ருதயுகம் ஸ்ரீ நரசிம்மர் அவதார காலம், அதாவது யுவ வருஷம், வைகாசத்திங்கள் மேஷத்தில் சூரியன் நின்றருளிய காலமான சுக்லபக்ஷம், சதுர்தசி திதி, ஹஸ்தநக்ஷத்திர மென்றும், நான்முகன் சிருஷ்டி தண்டம் பெற்றது சூர்யோதய காலமென்றும், வடமொழி புராணத்தினின்று காணக் கிடக்கின்றது.

பிரம்மதேவன் சிருஷ்டி தண்டத்தைப் பெற்ற சமயத்தில்

"மங்கல முரசின மழையினார்த்தன
சங்குகண் முரன்றன தாரைபோ ரெனப்
பொங்கினர் மறையவர் புகலு நான்மறை
கங்குலி னொலிக்குமா கடலும் போன்றவே"

"பரந்த தேர்களிறு பாய் புரவி பண்ணையில்
தரந்தர நடந்தன தானை வேந்தனை
நிரந்தரந் தொழுதெழு நேமி மன்னவன்
புரந்தான் புடை வரு மமரர் போன்றனர்" கம்பர்.

என்றவாறு தேவர்கள் புஷ்பமாரி பெய்தனர். தேவமுரசங்கள் முழங்கின. அப்சர ஸ்திரீகள் நடனஞ் செய்தனர். "ஜெயஜெய" வென்ற சப்தம் எஞ்சிய தேவர்களின் நித்திரைக் கிடையூறுண்டாக்கியது. தேவர்களும் மஹரிஷிகளும் ஆனந்த மேலிட்டா லாடிப் பாடி நர்த்தனஞ் செய்யலாயினர். எதிர் பாராதவண்ணம் நாரதர் அங்கு நின்று ஒன்றுந் தெரியாதவரைப்போல் வீணையை மீட்டிப் பாடுவா ராயினர். ஆனால், காஞ்சிபுரத்தி லிவ்வாறு இந்திரன் சாபம் பெற்று

வரவும், பிரம்மன் அஸ்வமேதயாகஞ் செய்யவும், இன்னு மற்ற சகல நிகழ்ச்சிகளுக்கும் நாரதரே முதற்காரண பூத ரென்பதை ஸ்ரீவரதராஜன் அறிந்தும் புன்னகைகொண்டு விளங்கினர். இந்திரன், பிரம்மனையும் ஹரியையும் வணங்கி நின்று இச் சம்பவ ஞாபகசின்னத்தை ஸ்தாபிக்கலாயினன். பிரம்மனும், மஹாவிஷ்ணுவும், காயத்திரி பூர்வமாய் பூஜிக் கப் பெறுகின்ற காரணம் பற்றி, தேவ சிற்பியைக்கொண்டு, அவ் வத்திகிரியி லிருபத்து நான்கு படிகளை காயத்திரியி னிருப்பது நான்கு அக்ஷரங்களாக வமைத்து, மலையின்மே லொரு திவ்ய விமானமொன்றை நிருவி, பல்லிகளாகி நின்ற வேதியச் சிறுவர்களின் ஞாபக சின்னமாக அவ் விமானத்தி லிருபல்லிகளி னுருவத்தையு மமைத்தார்; தேவர்களும், முனி புங்கவர்களுங் கொண்ட ஆனந்தத்திற் களவு முண் டோ! உவகைக் கடலே யங்கு பொங்கி வழிந்த தெனி லொருவாறு பொருந்தும்

ரஞ்சிடை யயிழ்தங் கூட்டி நாட்டங்களான வெஞ்ச்
செஞ்சலை நீண்டு மீண்டு சேயரி சிதறித்தீய
வஞ்சமுங் இளவுமின்றி மழையென மதிர்த்தகண்கள்
அஞ்சன நிறமோ வண்ணல் வண்ணமோ வறிதறேற்றம்.

என்று நான்முகன் முதல் யாரும் யாவையும்
நின்ற பேரருளினை நீக்கி நீணெறி
சென்று மீளாக் குறிசோச் சேர்ந்திடு
தன்றிரு நாமத்தைத் தானுஞ் சாத்தியே. - கம்பர்.

என்று சகல தேவர்களு மடியார்களும் பாடி நின்றனர். தீயி னின்று வெளிப்பட்ட காரணத்தா லுண்டான தாபத்தை தணிக்க, நெய்யால் நம் பெருமானை நீராட்டி, முப்பழங்க ளோடு, அறுசுவை பொருந்த பிரசாதங்களை நைவேதித்து, பின்பு, வந்த சகல பக்தகோடிகளும் அந்த உச்சிஷ்டத்தை

யுண்டு மகிழ்ந்து நின்றனர்; பொருளும் வஸ்திரமும் மற்றும்
பற்பல பொருள்களும் வேதோத்தமர்களுக்கு வழங்கப்
பெற்றது. இந்திரன், முத்தாலான குடையையும், பந்த
ரையும்; பிரம்மதேவன், ரத்னத்தாலான கிரீடத்தையும்,
திருவாபரணங்களையும், விஸ்வகர்மா, சாபம் பெற்ற கஜேந்
திரனையுந் தந்தருள, அன்று மாலை யானைவாகனத்தோடு உத்
ஸவாதிகளை நடாத்தி தரிசித்து மகிழ்ந்தனர் அதேபோன்று,
சித்திரைத் திங்களில் திருவோண நக்ஷத்திரத்தி லிவ்வா
றான திருவிழாவை நடாத்துபவர் சர்வாபீஷ்டத்தையும்
பெற்று வாழ்வாரென்பது ஸ்ரீகாஞ்சி புராணத் துணிபு.
பின்பு, பற்பல சிற்றரசர்களும், காஞ்சியைத் தம் தலைநக
ராகக் கொண்ட சோழமன்னர்களும் திருக்கோயிலைக் கட்டி
வைத்தனர். உற்சவங்களை நிகழச் செய்தனர்; நைவேத
னங்களும், சந்தர்ப்பணைகளும் நன்கு நடைபெற்றுவந்தன.
வருகின்றன".

ஸ்ரீ காஞ்சியிலேற்பட்ட விஷ்ணுஸ்தலங்கள்; த்ரிவ்ஷ
ரோத க்ஷேத்திரம், புண்யகோடி க்ஷேத்திரம், வைகுண்ட
க்ஷேத்திரம், ஹஸ்திசைல க்ஷேத்திரம், ஹரிக்ஷேத்திரமென
வைந்தாம். இவைகளின் சிறப்பை யிந்த பாகத்திற் கிடை
யூறுசெய்த கல்விமகளாலு மியம்பக்கூடாதெனிற் பொருந்
தும். பூர்வத்தில் தூண்டியென்னும் பேரரசனுக்கு சேஷ
சயனராய் தரிசனந் தந்த காரணத்தால் வைகுண்டப்
பெருமாளென்றும், கபாலியென்னுங் கொடிய வரக்கனி
னிறப்புக்காளாகி, அவனெய்த அம்புகளை ஆட்கொண்ட
நிமித்தத்தால் நரசிம்மப் பெருமா ளென்றும், மஹாமேரு
கிரியைக் கொண்டு கடைந்து, அமுதமுண்ட போழ்திடை
யூறுநின்ற அசுரர்களைக் கொன்று, அவருதிரத்தைப் பானஞ்
செய்து செம்மேனியுடன் விளங்கினாராதலால் பவளவண்
ணன், என்றும், பிரம்மன் செய் வேள்வியைப் பாழ் செய்ய

வெண்ணிய சரஸ்வதிதேவி, மானபங்கப்பட்டுப் பின்பு பூஜித்த காரணங்கண்டு வித்யாகுண்ட ரென்றும், கலைவல்லி யா லேவபட்ட காளியைக்கொன்று, இருநான்கு கரங்க ளுடன் நடனம்புரிந்து நின்றாராதலின் அஷ்டபுஜ ரென்றும், மாயா ல னென்பானை தன்மாயையால் தன்கரத்தில் நிறுத் தின முனாந்தரமிட்டு, தீபப்பிரகாச ரென்றும், யாகத்திற் கின்னலியற்றுவான் கருதி, நதிரூபங்கொண்டு வேகவதி யென்றபெயரோடு தோன்றிய சரஸ்வதியை பங்கப்படுத்த நிர்வாண நிலையோடு சயனித்த காரணத்தால் யதோத்காரி யென்றும், யானைவடிவங் கொண்ட இந்திரனையும் பல்லி ரூபங்கொண்ட பாலகர்களையு மவர்கள் சாபக்குழியினின்று கரையேற்றி, அக்கரியி னிருதயத்தைப் பிளந்து, உள் ளிருந்து நரசிம்ம ரூபத்தோடு, பத்தியும் புத்தியுஞ்சித்திக்கு மாறு அடியார்க்கு தரிசனந் தந்தாராதலால் குஹாநரசிம்ம ரென்றும், அத்திகிரி க்ஷேத்திரத்தில் விளங்கலாயினர். காஞ்சியை அஷ்டக்ஷேத்திரமென்று வழங்குவது இம்முறை கொண்ட சின்னதிகளையேயாம்.

இனிச் சிறிது அத்திகிரியில் சித்தியடைந்த ஞானமுக் தர்களின் சரிதையை யாராய்வோம் நம்பரதகண்டத்தில் சித்தர்கள் மலிந்து விளங்கிய காலத்தில், நாமதேவ், ராமா னந்தர், துளசிதாஸ், கபீர்தாஸ் முதலானோர் விளங்கி, ஹிந்து சமயத்தைப் பிரசாரம்செய்து, பிரசமயப் புகுதலைத் தடுத்த புண்ய ஸ்தலமான காசியில், பாரத்வாஜ குலத்தைச் சார்ந்து, ஆகமசாஸ்திரப்படி அனுஷ்டானங்களைத் தவராது செய்து, ஈஸ்வர பக்தி யொன்றையே தம்முடைய வாழ் நாளின் கடமையாகக் கருதிய புண்ய சீலரான கனு என்ற வேதியன், பூர்வஜென்மபாபந்தொடர, கபட ஹிருதயனாகி, யாத்திராவாசிகளை வஞ்சித்து, தானும் வழிப்போக்கன் வேடம் பூண்டு, சமயம்பார்த்தவர்களை விண்ணுலகிற்கு

விருந்தினராக்கி, அவர்கள் பொருள்களைக் கொள்ளை
கொண்டு, வாழ்ந்தான். பலபராக்கிரமும், தந்திரமுமுள்ள
ஒருவர் கடைசியி லடிபட்டு வெட்கமடைவது சகஜம்; இது
உலகானுபவம். இவ்வாறாக, ஓர் பாஞ்சாலவீரன் இவ்வந்த
ணனின் கபடத்திற்காளாகி, நடுவனத்திற் செல்லுங்கா லிவ்
வந்தணனாற் றடுக்கப்பெற்று, மல்யுத்தத்தி லவ்வந்தணனைத்
தோற்கடித்து; இவனிவ்வாறு பல்லாண்டுகளாய்ச் செய்து
வருவதுகண்டு, இவனைநோக்கி "பிராம்மணனென்னும்
புண்ய குலத்திற் றோன்றி ஏனிவ்வாறான அக்கிரமஞ் செய்
கின்றனை. கொலைபாதகனைக் கொன்றால் பாபமின்றாயினும்,
நீயந்தணனானது பற்றி யுன்னைக் கொல்லாதுவிடுகின்றேன்."
என்று மொழிந்து, கையைப்புடைத்து, பூணூலையும், குடுமி
யையுஞ் சேதித்து அங்கஹீனனாக்கி யனுப்பிவைத்தான்.
இவ்வேதியன் மனம் புழுங்கி, அவ்விடத்தைவிட்டகலவுஞ்
சக்தியில்லானாகி, நத்தி நத்தி அத்திகிரியை யடைந்து, மண்
ணுலக வாழ்வை மனமகிழ்ந்து நீத்தனன். அத்திகிரியை
தரிசித்த காரணத்தா லிவன் பாபங்களெல்லாம் நீங்கப்பெற்று
தேவர்களா லேற்கப்பெற்று விண்ணுலகை யடைய விமான
மேறிச் சென்றனன்.

மற்றும், சிந்து நதி சீலமுடன் பாய்ந்து சிறப்படை
விக்கும் பாணகுண்டல மென்னுமூரில், வசிஷ்ட கோத்திரத்
தைச் சார்ந்த யாக்கிரி யென்னுமந்தணன், பூர்வஜென்மத்தில்
நல்ல சுகிர்தமும், நற்சிந்தையும், நன் நடத்தையும், நற் சாவ
காசமும், நற்போதமுமில்லாதவனாகி யிறந்த காரணம் பற்றி,
அடுத்த ஜன்மத்தில் பூர்வஜென்ம வாசனையுண்டாகி. பாபச்
செயல்களைப் புரிவதே நாமுலகத்திற் றோன்றிச்செய்யவிருக்
குங் கடமையெனக்கொண்டு வாழ்ந்து வந்தனன். இவ்வாறு
சில காலஞ்செல்ல, கோடைகாலமானது ஒருசமயம் தன்னு
டைய திருவிளையாடல்களை யோத வாரம்பித்தது. கோடை

காலத்திலு மக்னி நக்ஷத்திரமென்றொரு பகுதியுண்டு. அக் காலத்திற் சூரியன் தன்னேர்நிலையை யடைவதால் உஷ்ண மதிகமாக விருக்கும். அப்பொழுது இவ்வேதியன் ஓர் நெல்லி மரத்திலேறி கனி பறித்துக்கொண்டிருந்தனன். இதுசமயம், ஸ்ரீகாஞ்சியினின்று ஸ்தலயாத்திரைசெய்து கொண்டுவரும் ஓரந்தணன், வழிதப்பி, காடுகளிற் புகுந்து, உணவின்றி, அருந்த நீருங் கிடைக்காது, மிகவருந்தி இவ் வந்தணன் நெல்லிக்கனிகொய்யும் மரத்தை வந்தடைந்தான். வந்த க்ஷேத்ர, யாத்திராவாசியை யிவருமுபசரித்து, உண்ண நெல்லிக்கனியையும் விடாய் சாந்தி செய்துகொள்ள நீரை யும் கொடுத்தனர். காலஞ் செல்ல, காக்கிரியின் ஆயுளிறுதி வந்துற "ஆட்பார்த்துழலும் அருளில கூற்று" எதிர்ப்பட இயமதூதர்கள் வந்து இவ்வந்தணனைப் பிடித்துக்கொண்டு சென்றனர். மறையோதுவான் இயமலோகத்தை யடையுந் தருவாயில், வைகுண்டத்தி னின்றும் விஷ்ணு தூதர்கள் விரைந்து வந்து; காலதூதர்களை சிக்ஷித்து, காக்கிரியை விமானத்தி லெழுந்தருளச்செய்து வைகுண்டத்தையடைந் தனர். இயமன் கண்டஞ்சி "என்ன அறிவீனம்! பூலோ கத்தில் ஸ்ரீகாஞ்சி க்ஷேத்திரத்தினின்று வந்த ஓர் யாத்திரா வாசியை யுபசரித்ததாலன்றோ யிவனை விஷ்ணுதூதர்கள் அழைத்துச் சென்றனர். "இதை யா மறியாமற் போனே தேனே!" என்று மிகவருந்தினன். இதனின்றும் அடியார் களை யுபசரித்து, அன்னாருக்குப் பணிவிடை செய்பவர் எத் தீச்செயல்களின் கர்த்தாவாயினு மவர்களை பாபம் பின் றொடராதென்பது பெறப்படுகின்றது. ஆகவே, அத்தி கிரியை தரிசித்ததால் கனுவும், காஞ்சியினின் றெழுந்தருளிய வந்தணனை யுபசரித்ததால் காக்கிரியும், அனந்த கல்யாண குண ஸ்ரீமந்நாராயணனின் திவ்ய சரணாரவிந்த நிழலை யெய் தினரென்றெண்ணி விக் காஞ்சியின் சிறப்பை யியம்பவுந்

கூடுமோ! கோபுரதரிசனத்தால் பாபவிமோசனமேற்பட்டு
சுகிர்தத்தை யடைவானென்பது மலையுச்சித் தீபம்போன்று
வெளிப்படை. இன்னும் பலசரித்திரங்க ளிருப்பினு மினிக்
கூறுவது மிகையாகுமெனக்கண்டு இத்துடன் விடுக்கின்
றோம்.

வேகவதி நதி.

நதிகளில் நீராடுவதால் சற்கதியை யடைவர் மாநுட
ரென்பது புராண சித்தாந்தம். தீர்த்தயாத்திரையால் பலர்,
சாபம் நீங்கப்பெற்று, புத்ர பாக்ய முதலான சம்பத்துகளை
யிம்மையிலும், மறுமையில் வீட்டையு மடைகின்றனர்.
சரீரத்தில் வியாதியுள்ள தம்பதிகளுக்கே புத்ரபாக்கியம்
எளிதில் லபிக்காது. இவ்வியாதியை குணப்படுத்தி, புத்
தென்னும் நரகத்தை தாமடையாவாறும், உலகி லுண்மைச்
செல்வத்தை யடையாவாறு மிடையூறு செய்யும் புத்திரனைப்
பெற்ற பின்பு மேற்கூறிய அபீஷ்டங்கள் நிறைவேறுகின்றன.
உலகில், சந்ததியில்லாதா ரடையும் துக்கத்தைக் காட்டிலு
மற்றொரு துன்பமில்லையென்று நாமநுபவபூர்வமாயறியலாம்.
இவ்வித, வியாதியை குணப்படுத்தவே, புண்யத்துறைகளில்
நீராடுமாறு நம் சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஏனெனில்,
ஒவ்வொரு நதிக்கு முற்பத்தி ஸ்தானம் ஓர் மலை, மலைகளிலு
லோகங்கள் நிறைந்து கிடப்பதை பூர்காள சாஸ்திரக்காரர்
கள் நன்குணர்வர். அம்மலைகளினின்று, வரும் நீரானது அவ்
வுலோகங்களை தன்னில் கலந்து, நதிகள் மூலமாயோடி
கடலை யடைகின்றது. இந்த நதிகளில் ஸ்நானஞ்செய்வ
தால் அவ்வுலோகங்களின் சக்தியால் வியாதி நீங்கப்பெற்று
பின்பு புத்திர பாக்கியத்தை யடைகின்றனர். உதாரண
மாக, தாம்பிரவர்ணி நதியில் ஸ்நானஞ் செய்யுங்கால் தாம்

பிரமென்னு உலோகம் அப்புனலிற் கலந்திருப்பதை நாம் கண்கூடாகக் காணலாம். இவ்விடங்களில் நம் ஆன்றோர் சாஸ்திரவாயிலாக வைத்திய முறைகளைப் போதித்ததின் மேன்மையே மேன்மை. இவர்களுக்கு நாம் கைம்மாறு செய்தலாவது, அச்சாஸ்திரங்களைக் கேலிசெய்து, பழித்துப் பழிக்குப் பாத்திரர்களாகா திருத்தலேயாம்.

இனி, வேகவதியின் வரலாற்றைச் சிறிது ஆராய்வாம். காயத்திரிதேவி, மஹாவிஷ்ணுவால் மானபங்கப் படுத்தப் பட்டு, வெட்க மடைந்து, யாகசாலையை அழிக்க முடியாத வளாகி, தென்றிசையி லதிகவேகமா யோடினளாதலின் வேகவதி யென்னும் பெயர் பெற்றனள். பிரம்மலோகத்தை விட்டு நீங்கி, நந்திசைலத்தை விட்டு, மிகவும் வேகமாய் வந்து பாலாற்றிற்கலந்து, அப்பாலாற்றை விட்டு காஞ்சியின் குட திசையில் பிரிந்து, யாகசாலையின் கிழக்கே, வெகுதூரஞ் சென்று, மறுபடியும் பாலாற்றோடு மண்ணிக்கலந்து, சமுத்திரத்திற் சங்கமமாயினள்.

மானபங்க மடைந்த சரஸ்வதிதேவி சிந்தா கிராந்தையாய், ஸ்ரீவரதராஜனை மையலுடன் நோக்கி, "ஐயனே! பக்தர்க்கருள் மெய்யனே!" நான் மானபங்கப்பட்டேன், பெண்ணென்னு முருவங் கொண்டாற்கு, கற்பென்னு மணிகலனே மிகுந்த அழகைத் தரக்கூடியது பொன்னாலான ஆபரணங்களெல்லாம் சரீரத்திற் கோர் சுமையேயன்றி வேறன்று. கற்பென்னுமணிகலனே வீட்டை யெய்துவிக்கும் இயமன்கூட சாவித்திரியை நோக்கி, "கற்பின் பெருமையின் உன் கட்புலனில் யான் பட்டேன். அற்பமல்ல இச் சாக்ஷி" என்று கூறினன். மேலும், கற்பின் பெருமையை,

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை" என்று வள்ளுவனார்.

தம் மருள் வாக்காய் கூறியுள்ளனர். பதிவிரதா தர்மத்திற்கு பங்க மேற்படுமாயின் பெண்க ளிருப்பதைவிட இறப்பதே மேல். 'நானினி யெவ்வாறு பிரம்மனை யடைவேன்' எனக்கு சிருஷ்டி கர்த்தாவிட மிருந்து தண்டத்தைப் பிடுங்கிச் சென்றதா லோரபசாரமும், யாகத்தைக் கெடுக்க யத்தனிக்குங்கால் தங்களால் மானபங்கப் படுத்தப் பட்டதால் மற்றோ ரபசாரமு மேற்பட்ட யிப்பொழுது யா னெவ்வாறு சுத்தையாவேன். எவ்வாறு என்னைபென் கணவனேற்பார். ஹே! கருணாநிதே என்னைக் காத்தருளல்வேண்டும்." என்று சிந்தையில் துன்பம் பொங்கிக் கூறக்கேட்ட, காருண்ய பாத்ரன், மனமிறக்கங் கொண்டு, "சரஸ்வதிதேவி! பயப்படவேண்டாம். எதிர்த்தவரை சிக்ஷிப்பதும், அடுத்தவரை யளித்துக் காப்பது மென்றா மன்றோ! நீ யித்தருணம் முன்போன் றுநதியாகிப் பெண்ணையுடன் கலந்து, அதிவேகமாய் சமுத்திர சங்கம மாகவேண்டும். அத் தருணம் பிரம்மதேவ னுன்னழகிற்கு மோகங் கொண் டுன்னை சமுத்திர சங்கம முகத்தில் கட்டி யணைத்து நேசிப்பன். உன் பதிவிரதாசக்தி கோடி சூர்யபிரகாசம் போன்று புத்துயிர் பெற்று சிறக்கும்" என்றருளி வாணிதேவிக்கு விடை யளிக்கச் சென்றனள். உடனே பிரம்மதேவனை ஸ்மரித்தார். கணப்பொழுதில் நான்முகன் முன் வந்து வணங்கி நின்றார். மா லவரை நோக்கி, "ஆக்கலென்னுந் தொழில் படைத்த வருந்தவத்தோய்! இனி நீர் சுகமாக வாழக் கடவீர். உம்முடைய தர்மபத்னி தான்செய்த விடையூறுகளுக்கு மனமிறங்கி வருந்தி என்னை வந்து சரண் புக்கனள். யானும் கருணைகொண்டு, முன்போல நதிரூபங் கொண்டு பாலாற்றிற் கலந்து சமுத்திர சங்கம மாகும்படிக் கும், அத்தருணம் சமுத்திர சங்கமத்தில் நீ ரவளை யேற்றுச் செல்வீ ரென்றும் வரமளித்துள்ளேன். உம்மை யடைய வேண்டு மென்ற ஓரவாவின் பெருக்கால் அதிவேகமாகச்

செல்லுகின்றாள். காஞ்சியிலோடும் நதியில் ஸ்நானஞ்செய்வதா லவளுக் கேற்பட்ட மானபங்க விஸ்ராந்தி." என்றருள, பிரம்மனும் கடிது சென்று தன் பத்னியை யேற்றனன். சரஸ்வதி யம்மைக்கும் பிரம்மனுக்கு முள்ள குரோதம் நீங்கி, சினேக மேற்பட்டது கண்டு சகல தேவர்களும், "ஜெய ! ஜெய !" வென்று உரக்கக் கூறி புஷ்பமாரி பெய்தனர். நான்முகனின் நலமிகு காதலை சரஸ்வதி தேவி மீட்டும் பெற் றின்புற்றதைக் கண்டு மாலும் புன்னகை கொண்டார். கார்மேகத்தைக் காண, மயி லதிவேகமாய்ச் செல்வதுபோல, கணவனுடைய, அன்பை, அருளை கடைக்கண் பார்வையைப் பெற சரஸ்வதிதேவி நதிரூபமா யதிவேகமாய்ச் சென்றுளாதலின் 'வேகவதி' யென்ற பெயரையும் விண்ணவர் மகிழ, புகழப் பெற்றனள்; வேகவதி யென்றும், கலைமகள் நதியென்றும், புராணத்தாரும், புலவர்களு மழைக்கலாயினர்; இந் நதியில், பக்தியோடு நீராடுவார் இம்மையில் சுகத்தையும் மறுமையில் பேரின்பத்தையு மடைவரென்பது புராணப் பிரமாணம். இதை ஓர் சிறு திருஷ்டாந்த மூலமாக விளக்குவாம்.

காசி நகரத்தில் நிவாசித்து வந்த தௌமிய நாத ரென்னும், காசிப கோத்திரத்தைச் சார்ந்த பிராமணனொருவன் சாஸ்திர சம்பன்னனாகி வாழ்ந்து வந்தனன். பூர்வ ஜென்ம கர்மாவினாலே யவனுக்கு அந்திய காலத்தில், குஷ்டமுதலான நோய்களுண்டாகி, பல பக்தர்களை யவ்வியாதியை நீக்கிக்கொள்ள ஓருபாயங் கேட்க, அவர்க ளெல்லோருமொருமித்து, வேகவதிநதியில் ஸ்நானஞ்செய்தா லவ்வியாதி படுமென்றனர். அவ்வாறே, யவ் வந்தணன், தொண்டை நாட்டை யடைந்து, வேகவதியில் நீராடி, நோய் நீங்கப் பெற்று வைகுண்டத்தை யடைந்தனன். தவிர, மஹாவிஷ்ணு, இந்த நதியில் ஸ்நானஞ் செய்பவர் "கங்கையிற்

புனிதமாகி" அரங்கனுடைய திருவடிகளைத் தன் திரையாகுங் கரங்களாற் றழுவி நிற்கும் "காவிரியில் ஸ்நானஞ் செய்வா ரடையும் புண்யத்தை யடைவா" ரென்று வருமுமளித்துள்ளார் தவிர, ஸ்ரீகாஞ்சி க்ஷேத்திரத்தில், பத்ம தீர்த்தம், அக்னி தீர்த்தம், ப்ரம்மதீர்த்தம், குசலதீர்த்தம், வேகவதி தீர்த்தம், சேஷதீர்த்தம், வராஹதீர்த்தம், என வேறு புண்ய நீர் நிலைக ளடியார்களுக்கு அடியனும் ஸ்ரீவரதராஜனுடைய அன்பைக்கொண்டு சுற்றி யமைந் திருக்கின்றன. இவைகளில் நீராடி, பாபவிஸ்ராந்தியாகி, வரதராஜனை தரிசிப்பார்க்கு ஊழும் ஞானமும் கைகூடுமென்பர் பெரியோர். இத்தீர்த்தங்களில் நீராடி இந்திரன் முதலான தேவர்கள் மஹாத்தான பராக்கிரம சாலிகளாயினர்; சாபவிமோசனம் பெற்றனர்.

பொய்கையாழ்வார்.

இந்திய நாட்டின் பக்தர் பெருமையே பெரிது! மத உத்தாரணஞ் செய்யவந்த மஹான்களின் மகிமையும் நம் பாரத நாட்டிற்கே யுரியது. இராமாநுஜரும் சங்கரரும் அவதாரமான திந்த பாரத நன்னாட்டிலே யன்றோ. மற்றும், விடாமுயற்சியோடு பக்திவலை வீசிய செம்படவர்கள் நம் நாட்டில் மலிந்து சிறந்தனர். அவனருளாலே நாம் கருதக்கூடாத அற்புதங்களைச் செய்தனர்

அறவாழி யந்தணர்தம் மடிசேர்ந்தார்க்கல்லால்
பிறவாழி நீத்தல் பெரிது
பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்.
இறைவனடி சேராதார்—என்று திருவள்ளுவ நாயனார்

கூறியதுபோல, பிறவி என்னுங் கடலை நீந்த வெண்ணுபவர் இறைவனுடைய சரணாரவிந்தங்களையே சதா சர்வகாலமும் நினைந்துருகுவர். உணவையு முட்கொள்ளார்; கவலை யதிகரிக்க வருந்துவர். இவர்கள் மனோநிலைக்குத் தக்கவாறு ஈஸ்வரனும் வசப்படுவன். தாமரை யிலைக்கும் தண்

ணீருக்கு மெவ்வளவு பற்றுண்டோ, அவ்வாறே யிருக்கும் அடியார்களி னுலகப்பற்று. நிற்க,

தந்தை தாய் தமர் தார மகவென்னு மிவையெலாஞ்
சந்தையிற் கூட்டமிதிலோ
சந்தேகமில்லை மணிமாட மாளிகைமேடை
சதுரங்க சேனை யுடனே
வந்ததோர் வாழ்வுமோ ரிந்திரஜாலக் கோலம்
வஞ்சனை பொருமை லோபம்
வைத்தமனமாங் கிருமி சேர்ந்த மல பாண்டமோ
வாஞ்சனை யிலாத கனவே — தாயுமானவர்.

என்றவாறு, நாடகக் கொட்டகையை யொக்கு மிவ்வுலகில் நடிகர்களாக விளங்கும் மானுடர் சகலரும் “பக்தி” யென்னு மூவெழுத்துப் பதத்திற்கு முதன்மை பொருந்திய சிறப்பையு முயர்வையுங் கொடுக்கின்றனர். ஏனெனில், அஃதேதான், பிறப்பு யிறப்பென்னு மந்தகாரத்தை விட்டு ஒளி பொருந்திய யிடத்திற்கு நம்மை யிட்டுச்செல்லும் வழி காட்டி; சம்சாரக் கடலி லுழலும் நம்மைக் கரை யேற்றும் மாலுமி; ஒரு முழுமுதற் கடவுளையே தக்கவாறு பக்தி செய்வார் பலரு மவனுடைய சரணாரவிந்தங்களை யடைகின்றனர்; ஆயினும் ஒரே சூரியனை, ஹிந்துக்களில், தமிழர், ‘சூரியன்’ என்றும், தெலுங்கர் ‘சூர்யுடு’ என்றும், மகம்மதியர்கள் ‘சூரி’ என்றும் ஆங்கிலேயராகும் கிரிஸ்தவர்கள் ‘சன்’ (Sun) என்று மழைப்பதுபோல், சர்வேஸ்வரனை ஒரு சார்பார் ‘விஷ்ணு’ வென்றும், ஒரு பிரிவினர் ‘சிவ’ மென்றும், மற்றொருவகையார் ‘முகம்ம’ தென்றும், வேறொரு வழியினர், ‘கிரிஸ்து’ வென்றும், போற்றுகின்றனர். ஆனால், இவர்கள் செய்வதெல்லா மோரேபக்தி; அடைவதெல்லாம் ஒரே முக்தி; இன்னார் பலரும் ஆஸ்திகத்தையே ஆதரிப்போருமாவர்.

சமயநெறி தழைத்தோங்க, மதஸ்தாபகர்களவசியம்; வைஷ்ணவத்தை 'ராமாநுஜரும்', சைவத்தைச் 'சங்கரரும், மகமதியத்தை நபியும், கிரிஸ்தவத்தை 'இயேசு' வுந் தோன்றி ஸ்தாபித்தனர். பௌத்தத்தை ஸ்தாபித்தவர் புத்தருமாகின்றார். சமயநெறிக் கேற்றவாறு பெயர்களு மமையலாயிற்று; சைவத்தைப் போற்றி யணைத்தார் 'நாயன்மார்'க ளென்றும், மாலிட மாவல் கொண்டார் 'ஆழ்வார்'க ளென்றும், அழைக்கப் பெறுவர். ஆனால் ஓராழ்வாராவது, நாயன்மார்களாவது பிற சமயக்கடவுளைத் தூஷிக்கவில்லை. இவ் வடியார்களெல்லோரும் முக்தி வீடாய் கொண்டு சித்தி யடைந்தனர். நிலஉலகிற் 'பக்தி' யெல்லாவற்றையும் விடப் பெரிதானது பற்றி அது சம்பந்தமாகக் கூறவந்த நூல்களுக்குப் 'குருபரம்பரை' யென்றும் 'பெரியபுராண' மென்றும், பெயர் புனையலாயிற்று. இவைகளை யெழுதிவைத்தாரும், பக்தியிற் சிறந்த பெரியார்களாகின்றனர். இனிப் பொய்கையார் வரலாற்றைச் சற்று ஆராய்வோம்.

பிரம்மனுக்குப் பிதாவாகி, சங்கரனுக்குச் சங்கரனாகி ஆலிலைமேற் யுகப்பிரளயகாலத்திற் பள்ளிகொள்ளு மாதி மூலப் பொருளை யாராதித்து வந்த ஆழ்வார்கள் பதின்மராவர். இவர்கள் அவனருளாலே தோன்றி, அவனருளாலே தம் கடமையைச் செய்து, அவனாஞ்ஞையின்படியே அவனையே மீண்டு மடைந்தனர். வைணவ சமய விளக்கிற்குத் தூண்டுகோலாலாயினவரும் மிவ்வாழ்வார்களே.

"மற்றுள்ள வாழ்வார்களுக்கு முன்னே வந்துதித்து
நற்றமிழால்நூல்செய்து நாட்டையுய்த்த—பெற்றிமையோ
ரென்று முதலாழ்வார்க ளென்னும் பெரியவர்க்கு
நின்ற துலகத்தே நிகழ்த்து"

என்றவாறு இப் பத்தாழ்வார்களுள்ளும் மூவர் முதலிலுதித்தனர். இம்மூவரும் அயோனி சம்பந்தராயவதரித்தவர்கள். சைவ சமயத்தில் சமயக்குரவர்களான “அப்பர், சுந்திரர், மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர்” ஆகும் நால்வர்போன்று வைஷ்ணவப் பயிரை வளர்க்க வந்த கார்மேக மாகு மிவ்மூவரும் முதலாழ்வார்களென்றழைக்கப் பெறுவர். இவர்கள் முறையே “பொய்கையார், பூதத்தார், பேயா” ரென்றழைக்கப்பெறுவர். இம்மூவரிலு மிருவர் சாக்ஷாத் ஈஸ்வராம்சமாய் ஸ்திரீ கர்பத்திற் கிலக்காகாது உலகிற் றோன்றி, பக்தியை மலியச்செய்து, ஆத்மஞானோபதேசஞ் செய்து அறிவைப் பெருக்கினர். இம் மூவரிலும் முதல்வரான “**பொய்கையார்**” மும்மூர்த்திக்கும் முதல் மூர்த்தியாகி விளங்கும் திருமாலின் சேவைக்கு மையல்கொண்டு துலங்கினர். இவரவதரித்த ஸ்தலம் ஸ்ரீ காஞ்சீபுரமானதால், யா மிக் காஞ்சி மான்மியத்தி லிவரைக் குறிப்பிடவேண்டிய அவசியங் கண்டு எழுதலானோம்.

சமயங்களை ஸ்தாபனஞ் செய்ய வந்துதித்த பெரியார்களெல்லாம் புத்திரப்பேறில்லாது வருந்தி, ஈஸ்வர பக்தி பூண்டு, இல்லறத்தைச் சரிவர நடாத்தி, நியமம், ஆகமம், நிஷ்டை யாகும் மூன்றிலும் சிறிதுந் தவறாது, ஆலய வழிபாட்டை பிரதிதினமுங் கொண்டு, ஜகத்ரக்ஷகனை வேண்டி, ஓர் புத்திரனுக்காகத் தவங் கிடந்த பெரியோர்கள் மரபிலே தோன்றுவர்; இல்லையேல் அயோனி சம்பந்தராய், ஜனகனுக்கு சீதாதேவி யகப்பட்டதுபோன்று தோன்றி ஆசார சீல, சம்பன்னர்களால் வளர்க்கப்பெற்று தம் பக்திமணத்தை வீசிநிற்பர். தோன்றிய அடியார்களும், ஈஸ்வரனுடைய அருட் கருணையால் பிறந்து முதலாகவே சத்விஷயங்களிலேயே பிரவர்த்தித்து வருவர்; திருவிளையாடல்களை

யுடைய பெம்மான், தம் திருவிளையாடலைச் சிலரிடத்துப் புரிய, சில தொண்டர்கள் முதலில் அக்கிருத்தியங்களுக்கு ஆளாகி, பின்பு சத்தான விஷயத்தி லீடுபடுவர்; பிற் கூறிய வர்களிடத்து சர்வேஸ்வரன் மனக் கருணையைக் காட்டுவ தாலே யென்று கண்டுகொள்க. திருமங்கை மன்னனும், அப்பரும், முதலிலே துஷ்டவழிகளி லீடுபட்டு பின்பு இறைவனு லாட்கொள்ளப்பெற்று விளங்கினர்.

காஞ்சிமாநகரில், பூலோகத்தையொக்குமோர் தடாக மிருந்தது. அத்தடாகம், அஞ்ஞானமென்னும் நீரைத் தன்னிற்நிரம்பக் கொண்டு, மானுடர்களாகும் மச்சங்களையும், மற்றுமுள்ள நீர் வாழ்பிராணிகளையும் தன்னுடைய மாய் கையால் கட்டுப்படுத்தி தன்னுடைய பெருமையை, அஞ் ஞானிகள் தன்னைப்பற்றியுயர்வாகப் பிறரெண்ணவேண்டு மென்று, சதாசர்வகாலமும் பேசித்திரிவது போன்று, தம் பேச்சுக்களாகும் அலைகளால் வெளிப்படுத்திக் கொண்டி ருந்தது. அக்குளத்தில் சிற்சில தாமரைமலர்கள் தோன்றி, அஞ்ஞான மமிழ்த்த வாடிப்போயின; சில அழுகிப் போயின; சில மொட்டாகவே வெம்பிப்போயின; சில காலஞ்செல்ல, பராக்கிரமும், அஞ்ஞானத்தை யழிக்குந் திறனும் பொருந்திய ஓர் மலர் வெளிக்கிளம்பி, ஓங்கி நின்று மலர்ந்தது. அம்மலருக்குள்ளே நான்முகன் சிருஷ்டியாக ஓர் குழந்தை யிருப்பதைப் பலருங் காணலாயிற்று. "அந் தரதலத்தில் ரவியஞ்ச வொளிவிஞ்சு" மிக்குழந்தையைக் கண்டவர் ஆச்சரியமுற்றனர். அஞ்ஞானக்கடலில் முழ்கிய மச்சங்கள் அம்மலரண்டை கூடி நின்று, அக்குழந்தையின் பக்தி மணத்தை யுணர்வதாயிற்று. இக்குழந்தையி னவ தாரத்தைக்கண்டு களிப்படைவதுபோல அம்மச்சங்கள் துள்ளிக்குதித்தன; பிறமீன்களிடத்துங் கூடிக்குலாவிப் பேசின. அஞ்ஞான மென்னுமலையும் சிறிது தணிவடைந் தது.

இக்குழவியைக்கண்ட ஓர்வைணவ அடியாரக் குழவியைக்கொண்டு தம் புத்திரனில்லாக் குறையை நீக்கிக் கொள்ளலெண்ணி, குழந்தையை வாரியெடுத்து வீட்டிற்குக் கொண்டுபோய் தம்மனைவியிடங் கொடுத்தார். அன்னார் மனைவியோ, அச்சமய மடைந்த சந்தோஷத்தை அளவிடமுடியாது. தன்னைவிடபாக்கியவதி உலகில் வேறொருவருமில்லையென்று தன்னுள்ளே நினைந்தாள்; சிரித்தாள். பெருமைகொண்டாள். இன்னது செய்வதென்று தெரியாமல் அன்பின்மேலீட்டால் குழவியை சதா முத்தமிட்டாள்; மார்போடணைத்தாள்; தன்னிரு தனங்களிலிருந்தும் பால் சுரக்கக்கண்டு குழந்தைக்குக் கொடுத்துப் பசியாற்றினள் "புத்திரனில்லாக்குறையை பூர்த்திசெய்ய வந்த பூரண சந்திர பிம்பமே" யென்று பலவாறு அக்குழந்தையை விளித்தாள். ஆலயங்களுக்குச்சென்று ஈஸ்வரனை வழிபட்டு தனக்கு அவனருள் ஏற்பட்டதற்காக மிகவும் தன் நன்றியறிவைச் செலுத்தினள். நெய்விளக்கேற்றினள். குழந்தையிடத்துள்ள வாஞ்சையை நாமெழுதி முடியாது. அவரவரே யனுபவபூர்வமாக யறியவேண்டியதே யன்றி கூறுவதென்றால் பெரிதாகும். இக்குழந்தையும் பசியின்றி வளர்ந்து வனப்பை யடைந்து, வித்யாப்யாசம், உபநயனம் முதலான சடங்குகளும் நிறைவேற்றப் பெற்று, சுகித்திருந்தது.

சில ஆண்டுகள் செல்ல குழந்தை சதா 'ராம' நாமஸ்மரணை செய்துகொண்டு, நல்வழியிலேயே நடப்பட்டிருக்கக் கண்ட வளர்த்ததந்தை ஆனந்தக்கடலில் எறியப்பெற்றார். 'விளையும் பயிர் முளையிலே' யென்றபடி, சிறுபிராயத்திலேயே, ஒழுக்கமும், கல்வியும், ஆசாரமும் ஒருங்கே விளங்க வாழ்ந்தார் நம் செல்வக்குழந்தையாகு மாழ்வார். அதிகாலஸ்நானம், சந்தியா வந்தனம், பிராணயாமம், சூர்ய

நமஸ்காரமுதலான அனுஷ்டானங்களைப் பிரதம மாகக் கொண்டொழுகினர். பொய்கையிலுதித்தது பற்றி 'பொய்கையா ; ரென்ற காரணப்பெயரும் வழங்கலாயிற்று. முதலாழ்வார்களில் முதல்வரான பொய்கையார். சம்சாரபந்தத்திலகப்பட்டுழலும் சேவலர் சஹவாசத்தை விட்டு, தாமரை யிதழிற் பட்ட நீர்போல் உலகத்தாரோடு பற்றுதியான சம்பன்னராயினர். பொய்கையாழ்வாரைப்பற்றிப் பலரும் பேசினர். சிலர் பொய்கையாரிடம் வந்து நல்லுபதேசம் பெற்று, உலகைத்திரணமாகமதித்து, காமக்குரோதாதிகள் தம்முடைய கடும்பகைவர்களென் றெண்ணி, சகலத்தையும் வெறுத்து, போகத்தை விலக்கி யோகத்தைக் கைக்கொண்டு நம்பொய்கையாரின் சிஷ்யர்களாயினர்.

நிற்க, பொய்கையார் தம் வழியிலீடுபட்ட சிஷ்யர்களோடு திவ்யதேசயாத்திரை செய்து, ஆங்காங்கே யெழுந்தருளியிருக்கும் பெருமானை, தன் நாவால் மனமாரப்பாடி பரவசராகி, சாதுசங்கத்தையே கொண்டு, திவ்யநாம சங்கீர்த்தனங்கள் செய்து வந்தார். ஆங்காங் கெழுந்தருளிய மூர்த்திகளும், பொய்கையார் செய்யவேண்டிய தொண்டுகளின்னின்னவென்று பிரசாதித்தருளினர்.

ஓரிரவில், கார்மேக மதிகோபங் கொண்டு, பூர்வம் இந்திரனுடைய தூண்டுகோலால் மேகங்கள் கிருஷ்ணவதாரத்தி லெவ்வாறு திரண்டு வந்து மழைபெய்தனவோ, அவ்விதமேபோல வருஷிக்க வாரம்பித்தது. இடிகள் சகலரையும் நடுங்கச் செய்தது. இளமின்னல்கள் மனிதனுக்கு நல்ல புத்திதோன்றி மறைவது போன்று பளீர் பளீரென்று தோன்றி கணப்போழ்தில் மறைந்தன. தெரு வெல்லாம் நீரோட்டங்கண்டது. மழைக்குப்பயந்து, குளிரால் நடுக்குற்று பிச்சைக்காரர்கள், பெட்டிப் பாம்பைப்போன்று

சுருட்டிக்கொண்டு, சரிவர உடுக்க ஆடையுமின்றி பரித பித்தனர்; பறவைகள் மழையில் நனைந்து, ஈனஸ்வரத் துடன் கத்தின; குடியானவர்கள் மிகவும் சந்தோஷ மடைந்து தங்கள் உழவுகோலைப் பூட்டிவைத்து அதிகாலை யில் தம் தொழிலைக்கவனிக்க வெண்ணினர். பயிரிட்ட நிலங்களும், பயிரிடாநிலங்களும் யேகோபித்து மகிழ்ந்தன. மிராசுதார்கள்கவலை சிறிது நீங்கலாயிற்று; அன்னக்காவடி கள் மட்டும் மழையை வெறுத்தனர்; மழையினுடைய அவ சியத்தை அறியாமற் போயினர். இத்தருணம் நம் பொய் கையாரின் செய லென்னவென்பதைச் சற்றாராய்வோம்.

வாடையில் மெலிந்து நம் பொய்கையாழ்வார், ஒருவர் தங்கக் கூடிய தாழ்வாரத்தில் ஒடுங்கி நின்று கொண்டு, "கருணையாகும் மாரியை யீசனிவ்வாறு நம்மிடத்தில் பொழியக்கூடாதா" வென்று பலவாறு ஆலோசித்துக் கொண்டிருந்தார். இத்தருணம், மற்றொருவர் ஓடிவந்து அத்தாழ்வாரத்தை யணுகினர். அதுகண்ட நம் பொய் கையா "ரிருவருக்கு இடமில்லை" யென்றருளினார். இதைக் கேட்ட வந்தவர் "என்னவஸ்தை யெனக்குத் தெரியும். இருவருக்கிடங் கொடுக்கு மிந்தவிடம். இறைவன் ஒரு வருக்குத்தானோ விடங்கொடுப்ப" னென்றருள யவ்வாறே யத்தாழ்வாரம் அகண்டது கண்டு பொய்கையார் "இவர் ஓர் அடியாரா யிருக்கவேண்டு" மென்றெண்ணி யவரை யேற்றுக்கொண்டார். சிறிது நேரஞ் செல்ல, மற்றொருவர் மிகவும் வேகமாய் வந்து "மழை! இடங்கொடுங்கள். நனைந்தேன். நனைந்தேன்" என்றார். உடனே பொய்கை யார் "இதென்ன தர்மசங்கடமும் தாக்ஷிண்ய ஸ்ரார்த்தமு மா யிருக்கின்றது. இருவருக்கு மே லிங்கு மற்றொருவர் தங்க இடமில்லை" யெனப் புகன்றார். அதற்கு வந்தவர், "மூவருக்கு இடம் முதல்வனு ளுண்" டென்று விடை பக

ரக்கண்டு, மீண்டு அத்திண்ணையிடங் கொடுத்தது கண்டு நம் பொய்கையார் பய, பக்தியுட னவரையுமேற்று இடங் கொடுத்துக் களித்திருந்தார். ஆகவே, யிது போழ்து பூதத்தார், பேயா ரிருவரும் பொய்கையாரோடு வந்து சேர ஆனந்தமும் கடிந்து அவ்விடத்திற்கு வந்து மூவரையும் நெருக்கிற்று. அடியார்களோடு ஆனந்தமும் யாத்திரை செய்து, அடியார்கள் படும் அவஸ்தை யெல்லாவற்றையும் தானு மனுபவிக்கின்ற தன்றோ. ஒருவருக் கொருவர் கண்டுகொண்டு, இவரவ ரடியைப்பற்றி, அவர் இவரடியை வருட ஒருவருக்கொருவர் குசலப்பிரஸ்னஞ் செய்து கொண்டு, தம் தம் திவ்யதேசயாத்திரைகளையும் தாம் தரிசித்த மூர்த்திகளின் திவ்யபிரபாவத்தையுங் கூறி சந்தோஷமடைந்தனர். திவ்ய நாமசங்கீர்த்தனஞ் செய்தனர். பஜனையை நடாத்த வாரம்பித்தனர். பிரணவமே, ஸ்ருதி யாகவும், மழைதாரைகளே தாளங்களாகவும் இடிகளே மிருதங்கமாகவுமமைந்தன. கலைமகளே இவர்கள் நாவில் வந்தமர்ந்தாள்.

இவ்வாறாக, ஆதிமத்யந்த ரகிதனுக்கு முன்னை யெக்காலங்கண்டு பூஜிப்பது! ரூடமில்லாத உன்னை யெவ்வாறான ரூபங்கொண்டு பூஜிப்பது! நாமரூப மில்லாதவனை யெந்த நாமங்கண்டு ஸ்மரிப்பது! சர்வ வியாபியான யுன்னை எந்த ஆலயத்தில் வைத்து ஆராதிப்பது! அவயவ மில்லாத உன்னை யெந்த அவயவங்க ளெவ்வாறான அங்கிகளை தரிக்கச்செய்து கண்டு ஆனந்தங் கொள்வது! வருண ரகிதனான உனக் கெவ்வாறு எஞ்யோபவீதத்தையும், முகக்குறியையு மிடுவது. சகல ஆகாரங்களுக்கும் ஆதாரமாகு முன்னை எப்பேர்க்கொத்த நைவேதனங் கொண்டு மகிழ்வது!" என்று சந்தேகமுடையவராகித் திகைத்து நிற்கு மடியார்களுக்கு அவரவர் மனமுவப்ப தரிசனந் தந்தருளும் எம்

பெருமான் புன்னகைப் பவளவாயும், சங்க, சக்ர, அபய, தண்டமுதலான நான்கு அங்கங்கள் பொருந்தியகரங்களும், முத்து முடியும், துழாய்மாலேயும், ஞானக் கண்ணும், விசால ஹிருதயமும் விளங்க, ஹ்ருதய கமல லக்ஷ்மிதேவியுடனங்கு தோன்றிய இவர்களுடன் பஜனை செய்ய வாரம்பித்தார். பகவன்நாம சாம்ராஜ்யத்தைப் பெற்றிருக்கும் சமயத்திலே முதலாழ்வார்கள் மூவரும் தம்மருகே நிற்கும் அனந்த கல்யாண குணபிராமனை கவனிக்காது (பஜனை செய்வார் சிலரிக் காலத்தில் பஜனையைக் கேட்கவரும் பெண்டிரை நோக்குவதும், படத்தை நோக்குவதுமாக விருப்பது மிக வும் கேவலம்) நடனம் புரிய வாரம்பித்தனர். பரமாத்மாவு மவர்களோடு கூடி நர்த்தனம் புரிய, அத்தருணமுங் கவனி யாது ஆனந்த அருவி கண்களினின்றுஞ் சொரிய விருந்த இம் மூவரின் மனேலயம் என்னே! தேவர்கள் ஆகாயத்தில் நின்று சப்தமிடாது, வரதராஜனுடைய திருவிளையாடல் களைக் கண்டின்புற்றனர். இச் சமயம் ஒருவர் “பிறவி வேண்டேன்” னென்றும், மற்றொருவர் “சர்வகாலமும் உன் நாமஸ்மரணை செய்து திவ்யநாம சங்கீர்த்தனஞ்செய்து, உன்னையே சேவித்து, உனக்கே தொண்டு புரியு மிச்சென் மம் வேண்டும் வேண்டு” மென்றும், மற்றொருவர் “துன் மார்க்கர்களுடைய சகவாசமில்லாது, சன்மார்க்கர்களுடைய சினேகம் வேண்டும், அவர்களோடு சேர்ந்துன்னை யாடிப் பாடவேண்டும். பின்பு, முக்திவேண்டு” மென்றுங் கருத்து பட பலவாறு பாடி நின்றனர்.

சிறிது காலமாக, நான்காவது மனித ரிருப்பதைக் கண்டு, திகைத்து நோக்கி, ஞான விளக்கேற்றி, ஞாலத்தில் கோலங் கொண் டெழுந்தளிய கேசவனை, தாமோதரனை, அப்ரமேயனை, அனுமகோத்ர சூத்ரனை, நிஷ்களங்கனை, நிர் மலனை, சர்வசக்தனை, சர்வபோக்தனை, சர்வாபீஷ்ட பிரகிரு

தியை, மாயாதீதனை, மாயவனை, கொண்டல் வண்ணனை, கோவலனை, வெண்ணையுண்ட வாயனை, உள்ளங் கவர்ந்தானை அண்டர்கோனை, அணியரங்கனை, அமுதினை, மணிவண்ணனை. கண்ணனை, யசோதா புத்திரனை, மாயக்கூத்தனைக் கண்டு; பூமியதிர, நர்த்தனஞ் செய்து, ஆடிப்பாடி யகமகிழ்ந்து; தம்மை மறந்துப் பரவசமாகி,

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்யகதிரோன் விளக்காக - செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே யென்று. (பொய்கையார்.)

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை யிடுதிரியா - நன்புருகி
ஞானச்சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு
ஞானததமிழ் புரிந்த நான் (பூதத்தார்.)

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்க னணிநிறமும் கண்டேன் - செக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கங் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பா லின்று. (பேயார்.)

என்ற பிரபந்தங்களை யருளிச்செய்து, ஒருவரை யொருவர் 'நீர் செய்தபாக்கியம்', 'நீர்செய்தபுண்யம்', 'நீர் செய்த அருளிப்பாடு" என்று புகழ்ந்து எம்கரிவரதனைப் போற்றி நின்றனர். பின்பு, பல வாண்டுகளிவ் வுலகில் வாழ்ந்து, பக்தியென்னு மில்லறத்தைப் பண்புடனியற்றி, பாமரஜனங் களுக்கு ஆத்மஞானத்தைப் போதித்து, இறைவனின் திவ்ய

சரணாரவிந்தங்களை யெய்தினர். அடியார்களின் சரித்திரங்களைக் கூறும் நூல்களை வாசிக்கு மாஸ்திக சிகாமணிகள் மனலயப்பட்டு, அவர்களிடமே யீடுபட்டு, அவ்வடியார்கள் மாதிரியே தாமுமொழுகப் பிரயத்தனப்படுவர். இது மானுட இயற்கை. "குரங்காட்டி, வானரத்தைக்கட்டி, தன் கோலாடுதலால் அதையு மாட்டிவைப்பது போன்று நம்மனமான குரங்கைக் கட்டுப்படுத்தி, தம் உபாயங்களாகும் கோலால் ஆட்டுவிக்க உன்னருள் எப்போழ்து வரும்" என்று ஸ்ரீஸங்கராசார்யர் கூறியது போன்று, பல பக்தர் சரிதங்களை வாசித்து, அன்னா ரருளிச்செய்த பாசுரங்களை கவனித்து நாமொழுகினால் நம் மனக்குரங்கை இறைவனாகிய குரங்காட்டி தானேவந்து பற்றி, தம்கோல் கொண்டாட்டி, நல் வழியி லீடுபடச்செய்வன். பிரம்மஞ்ஞானம் பெறுவதற்கு, ஸ்தல மஹாத்மியங்களை வாசிப்பதும், ஆழ்வார் வைபவங்களை வாசிப்பது முதற்படையாகும். நம்முடைய தினசரி நிகழ்ச்சிக்குறிப்பில் ஆலயஞ் செல்ல லென்னும் ஓர் நிகழ்ச்சியையும் குறிப்பிட்டொழுகல் மானுடர்களாகிய, ஆறறிவுபெற்ற யுக்தா யுக்தந்தெரிந்த, விவேகங் கொண்ட, "எண்ணறிய பிறவியி" லுயர்ந்த பிறவியெடுத்த நம்முடைய கடமையாகும். ஆலயஞ்செல்ல நேரமில்லை யென்பா ருலகில் பொய்கையாழ்வார் காலத்திலிலர்.

"பக்தி வலையிடுவோன் காண்க"

பக்திவலையிற் படுவோன் காண்க

அருளிச் செயல்.

என்னெஞ்சமே யானென் சென்னியான் தானவனை
வன்னெஞ்சங் கீண்ட மணிவண்ணன் — முன்னம்சே
யூழியா னூழி பெயர்த்தான் உலகேத்தும்
ஆழியா னத்தியூரான் —
அத்தியூரான் புன்னையூர்வான் அணிமணியின்
துத்திசேர் நாகத்தின்மேல் துயில்வான் — முத்தி
மறையாவான் மாகடல் நஞ்சுண்டான் றனக்கும்
இறையாவா னெங்கள் பிரான்.

வாழி.

செய்யதுலா வோணத்திற் செகத்துதித்தான் வாழியே
திருக்கச்சிமாநகரஞ் செழிக்கவாந்தோன் வாழியே
வையந்தகளி நூறும் வகுத்துரைத்தான் வாழியே
வனசமலர்க் கருவதனில் வளர்ந்தமைந்தன் வாழியே
வெய்யகதிரோன் றன்னை விளக்கிட்டான் வாழியே
வேங்கடவர் திருமலையை விரும்புமவன் வாழியே
பொய்கைமுனி வடிவழகும் பொற்பதமும் வாழியே
பொன்முடியுந் திருமுகமு மிப்பூதலத்தில் வாழியே

முற்றிற்று.